# பாதுகாவலன்

PATHUKAVALAN

பாதுகாவலன்
புதிய விலை
தனிப்பிரதி ரூபா 1-50

தபால் மூலம் தனிப்பிரதி
ஆண்டு சந்தா
ரூபா 100/-

வெளிநாட்டு சந்தாவில் மாற்றமில்லை. தொகையாகப் பத்திரிகை பெறுபவர்கள் ஆண்டு சந்தா முற்பணமாக செலுத்துவதாயின் பிரதிக்குரூபா 60/-மட்டுமே.

மலர் 114 இதழ் 33 11-11-1988 (நவம்பர் 11-நவம்பர் 18) பிரதி ரூபா 1-50 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு


### இலங்கைக் கத். ஆயர்சங்கம், துறவறசபைச் சிரேஷ்டர்கள் திருச்சபைக்கு விடுக்கும் பிரமாணங்கள்:

# இறைவன் அளித்த செல்வங்களை ஏழைகளுடன் பகிர்ந்து வாழ்வோம்

**சகல மறை ஆயர்களும் இலங்கையில் சேவை செய்யும் துறவற சபைகளின் தலைவர்களும் பல்கம் இடத்தில் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஒருங்கிணைந்து நாட்டில் நிலவும் இச்சூழ்நிலையில் நமது போதகரான யேசுவின் ஏழ்மையில் ஒருங்கிணைவதே முக்கிய நோக்கமென அறிக்கை விடுத்திருக்கின்றனர்.**

இலங்கையில் வறுமையும் அதனால் ஏற்படும் தீமையும் அதிகரித்துள்ளதை உணர்ந்து அண்மையில் விடுக்கப்பட்ட இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் திருமுகத்தை ஆதாரமாகக் கொண்டு இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை,துறவறசபைச் சிரேஷ்டர்கள், கத். சங்கம் இணைந்து பல பிரமாணங்களை விடுத்துள்ளனர்.

தேவைக்கு அதிகமாக இருப்பனவற்றை மட்டுமல்லாது ஏழைகளுக்குப் பெற உரிமை இருந்தும் அவர்கள் பெற்றிரா தவற்றையும்நாம்தியாகம்செய்யத் தயாராயிருக்க வேண்டும். ஒரு நல்ல குடும்பத்தில் உண்மையான பகிர்ந்தளிப்பு இருப்பதுபோல், கிறிஸ்தவர்களாகிய நாம் எமக்கு இறைவன் அளித்த செல்வங்களை எமது சகோதரருடன் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

வெளி ஆடம்பரங்களைத் தவிர்த்து கிறிஸ்தவ மதிப்பீடுகளுக்குச் சாட்சிபகர, தேவையற்ற செலவுகளையும் பகட்டான வாழ்க்கையையும் கைவிட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்திற்கேற்ப, எமது வாழ்க்கையை மாற்றியமைத்து எம்மைச்சூழவுள்ள ஏழ்மை நிலைக்கேற்ப எமது வாழ்க்கையையும் அமைத்துக்கொள்வோம்.

யூபிலிகள், குருப்பட்டம், முதல் வாக்குத்தத்த நாள், கோயிற் திருவிழாக்கள்,பிறந்த நாள் அல்லது திருமணவைபவங்கள், ஞாபகார்த்த நாட்கள் என்பனவற்றில் தேவையற்ற, வெளி ஆடம்பரமான கொண்டாட்டங்களைத் தவிர்த்தல்வேண்டும்.

வழிபாட்டுத்தலங்களை திருத்தியமைக்கும் போது கூட எளிமையும் வசதியும் வற்புறுத்தப்படல் போன்ற பல அம்சங்களைப் பிரமாணங்களாகத் தொகுத்து வழங்கியுள்ளனர். முழு அறிக்கையும் எமது அடுத்த இதழில் வெளிவரும்.

## கண்டியில் கிராமிய மக்களிடையில் சமூக அபிவிருத்தி

கிராமப்புறங்களில் வாழும் குடியானவர்களுக்கும் தோட்டத்தொலாளருக்கும் உதவி செய்யும்பொருட்டு திருச்சபையால் அமைக்கப்பட்ட ஒருதிட்டம் அநேக ஏழைமக்களுடைய வருவாயை அதிகரிக்க உதவியுள்ளது.

இந்த வருவாய் அதிகரிக்கும் திட்டத்தின் அம்சங்களாக ஐம்பதுக்கு மேற்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. குடும்பங்கள் காலணி உற்பத்தி, சிமேந்துக்கல் தயாரிப்பு, கோழிவளர்ப்பு, தென்னந்தொழில் முதலியவற்றில் ஈடுபட்டு வருவாய் பெறுகின்றனரெனினும் ஆடு வளர்ப்புத்தான் மிகவெற்றிகரமாகநடைபெற்று வரும் தொழிலாகும்.

இத்திட்டங்கள் யாவும் 1972ல் கண்டி மறைமாவட்டத்தில் ஆயர் லியோ நாணயக்காரவினால் ஆரம்பிக்கப்பட்ட சத்தியோதய இயக்கத்தினால் மேற்கொள்ளப் பட்டவையாகும். வேலையற்றோரும், குறைவான வேலை உள்ளோரும் சுய தொழிலில் ஈடுபடும்பொருட்டு அவர்களுக்குப் பல உதவிகள் செய்யப்படுகின்றன. கடன் உதவி, தொழில் நுட்ப ஆலோசனைகள், சேமிப்புத் திட்டங்கள் முதலியன இவற்றுள் சிலவாகும்.

இத்திட்டங்களுக்கென தெரிவு செய்யப்படும் குடும்பங்கள் பெரும்பாலும் குறித்த காலத்துக்கு முன்பே கடனைத் திருப்பிச் செலுத்தி விடுகின்றனர்.

இவை தவிர சத்தியோதய குழந்தை நல நிலையங்கள், பாலர் பாடசாலைகள், பால் விநியோக நிலையங்கள் ஆகியவற்றையும் நடத்திவருகிறது. வீட்டுத்தோட்டச் செய்கைக்கு விதைகளையும் உரவகைகளையும் கொடுத்துதவுகிறது.

இலங்கையின் சிறந்த சமூகப்பணியாளரில் ஒருவரான ஆயர் நாணயக்கார 1972ம் ஆண்டு ஏப்பிரல் கிளர்ச்சியின் பின்னர் சத்தியோதய இயக்கத்தை ஆரம்பித்தார். சமூக இனப் பிரச்சினைகள் மலிந்த காலகட்டத்தில் சத்தியோதய சமூக நலன், நீதியும் சமத்துவமும், இன ஒற்றுமை ஆகியவற்றுக்காக உழைக்கும் பல அமைப்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

## சேனையாளர் உள்தியானம்

மருதமடுத்திருப்பதில் மன்னார் கொமிற்சிய எல்லைக்குட்பட்ட மரியாயின் சேனையாளர்களின் உள்தியானம் ஒக்ரோபர் மாதம் 15, 16 ஆகிய இரு தினங்களில் நடைபெற்றது.

மன்னார் கொமிற்சிய ஆன்ம இயக்குநர் அருட்திரு. செ. எமிலியானுஸ்பிள்ளை அடிகளின் வழிகாட்டுதலுடன், கொமிற்சியத்தலைவர் செ. மரியதாசன் பீரிஸ், செயலர் ம. மரியதாசன் ஆகியோர் தியானத்திற்கான ஏற்பாடுகளனைத்தையும் கவனித்து வந்தனர். ''இன்றைய இக்கட்டான சூழ்நிலையிலும்கூட அன்னைமாதரசி நம்மனைவரையும் மருதமடுத்திருப்பதியில் ஒன்றுகூட வைத்திருப்பதனால் நாம் அனைவரும் இச்சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்தவேண்டும்' என கொமிற்சிய ஆன்ம இயக்குநர் தனது ஆரம்ப உரையில் குறிப்பிட்டார். பல்வேறு தடைகளையும் தாண்டி உள்தியானத்தில் பங்குபற்ற வந்திருந்த சேனையாளர்கள் அனைவரையும், கொமிற்சியத் தலைவர் தனது வரவேற்புரையில் பாராட்டிப் பேசினார்.

சுவாமிஜீவாபோல் அ.ம.தி. அடிகள் தியான உரைகள் நிகழ்த்தினார். அவர் தமது மறைஉரைகளின்போது, ''மரியாயின் சேனையாளர்களின் அழைப்பு, அழைப்பை ஏற்று வாழ்தல், சேனையாளர்களின் செபவாழ்வு, அர்ப்பணவாழ்வு மரியன்னையின் வாழ்க்கை ஆகியவற்றினை வேதாகமத்தின் மதிப்பீடுகளோடு தொடர்புபடுத்தி அப்போஸ்தலத்துவப் பணியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்கள்.

## வவுனியாவில் மறை ஆசிரியர் பாசறை

வவுனியா, செட்டிகுளம், ஓமந்தைப் பங்குத்தளங்களிலும், பாடசாலைகளிலும் மறை அறிவு பரப்பும் மறை ஆசிரியர்கட்கான பாசறை ஒன்று ஐப்பசித் திங்கள் 28-ம் 29-ம் நாட்களில் வவுனியா புனித மரியன்னை சிறுவர் இல்லத்தில் இடம் பெற்றது. இருபத்தைந்து மறை ஆசிரியர்கள் பங்கு கொண்ட இப்பாசறை 28ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகியது நிகழ்ச்சி ஒழுங்கின் பிரகாரம் இறை வணக்கத்தை அடுத்து ஆசிரியர்கள் தங்களை அறிமுகம் செய்தனர். அதைத் தொடர்ந்து வவுனியா உதவிப் பங்குத் தந்தை அருள்திரு. அவிதப்பர் அவர்கள் உரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில் பாடசாலையிலும், பங்கு மட்டத்திலும் ஒரு மறை ஆசிரியனின் பணி எப்படி இடம் பெற வேண்டுமென்பதை பற்பல உதாரணங்கள் காட்டித் தெளிவு படுத்தினார்.

## எழுத்தாளர்களே!

கிறிஸ்துமஸ் சிறப்பிதழுக்கான உங்கள் ஆக்கங்களை 1-12-88க்கு முன் பாதுகாவலன் அ. பெ. இல. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஆ—ர்.

## பயிற்சி முகாம்

புரட்டாதி 25இல் பொதுநிலையினருக்கான பயிற்சி இந்தூரில் கத்தோலிக்க மன்றத்தால் பேராலயமண்டபத்தில் 70 பேர் கொண்ட குழுவில் நடந்தேறியது. இந்தூர் ஆயர் பேரருட்திரு ஜோட்ஜ் அனத்தில் இப்பயிற்சியைத் தொடக்கிவைத்தார்.

அனைத்திந்திய கத்தோலிக்க சங்கத்தலைவர் திரு. ஜோட்ஜ் மெனேசஸ் உரைநிகழ்த்துகையில், கத்தோலிக்கருக்கிடையே ஒற்றுமை இருக்க வேண்டுமெனக்கூறினார்.

## பொதுநிலை இயக்கம்

சிறிய புஷ்பம் மறைபரப்புச்சங்கம், லீசிய தேச புனித திரேசம்மாளைப் பாதுகாவலராகக்கொண்டு இயங்கிவரும் ஒரு சுத்தோலிக்கப் பொதுநிலையினர் இயக்கமாகும். இது இந்தியாவில் மாத்திரமல்ல ஏனைய ஆசிய நாடுகளிலும் பல்லாயிரக் கணக்கான அங்கத்தவரைக் கொண்டு இயங்கி வருகிறது.

இம் மறைபரப்பு சங்கத்தின் முக்கிய குறிக்கோள் கிறிஸ்தவர் அல்லாதோர் மத்தியில் அப்போஸ்தொலிக்க செயலாற்றுவது ஆகும்.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம் கருத்து

### பேரிழப்பு

இறந்து விட்ட ஒருவருக்கு அனுதாபம் தெரிவிக்கையில் வெறுமனே 'ஒப்புக்கு' சொல்லுகின்ற ஒரு வார்த்தையாக இங்கு கூறப்படும் 'பேரிழப்பு' என்பதன் பதத்தைக் கொள்ள முடியாது.

அமரத்துவம் எய்திய முன்னை நாள் பேராயர்—கருதினுல் தோமஸ் பெஞ்சமின் கூறே அவர்கள் இலங்கையின் முதல் தேசிய பேராயர். கருதினுலாகப் பதவிவகித்த முதல் இலங்கையர் எனும் சிறப்புகள் பெற்றவர்.

இத்தனை பெருமைக்குரியவராக வாழ்ந்த அவரது அடக்கமான செபவாழ்க்கையும், மற்றவர்கள் நலன் கருதிவாழ்ந்த பொது வாழ்க்கையும் அவரை அறிந்த பலரது விழிகளில் நீர்கட்டி நிற்கச் செய்கின்றன.

தேசீயவாத அலை தலைதூக்கி, இலங்கைத் திருச்சபைக்குள்ளேயே குமுறல்களை ஏற்படுத்திக் கொண்டிருந்த காலகட்டங்களில் எல்லாம், இந்த அலைகளில் சிக்காது இறை தொண்டு ஒன்றே இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த உத்தமர்—நடுநிலையாளர்.

சிங்கள மறைமாவட்டங்களில் வாழும் தமிழர்களுக்கு அவர்கள் 'தமிழ் பேசும் சிங்களவர்' எனும் புதிய இனமென்று போதித்து மெல்ல மெல்ல தமிழையும், தமிழ்க்கல்வியையும் அவர்கள் மறந்து போகும்படி ஏனையவர்கள் செய்து கொண்டிருந்த காலகட்டங்களில் தனது மறைமாவட்டத்தில் வாழும் தமிழ்க் கத்தோலிக்கர்களுக்காக யாழ்ப்பாணம், திருகோணமலை போன்ற மாவட்டங்களில் இருந்து தமிழ்க் குருக்களை வரவழைத்து இன உணர்வுக் கலப்பற்ற இறை பணியாற்றிய மாமனிதர்.

1946ஆம் ஆண்டு பேராயராகத் தெரிவு செய்யப்பட்ட காலம் முதல் அவர் இறைபதமடையும் வரை தமிழ்க் குரவர் ஒருவரையே தனது செயலாளராகக் கொண்டிருந்தார் என்பதிலிருந்தே அவர் எத்தகைய தூய்மையான நடுநிலைமனத்தவராய் வாழ்ந்து வந்துள்ளார் என்பதனைப் புரிந்து கொள்ளலாம்.

பாடசாலை ஆசிரியராக, அதிபராக, குருமட அதிபராக இருந்த காலத்திலும், பேராயராக இருந்த காலத்திலும் அவர் கையாண்ட அணுகு முறைகள் நிர்வாகத்திறன் யாவும், இன்று உண்மையான இறைத்தொண்டில் ஆர்வம் மிக்க பல குருக்களை உருவாக்கியுள்ளன. ஒவ்வொரு குருவானவரும் நிறைவான குருத்துவ வாழ்வை வாழ வேண்டும் என்பதற்காக ஒவ்வொருவர் மீதும் தனித்தனி அக்கறை செலுத்தி வந்தார் என்று அவரால் பயிற்றப்பட்ட அவர் கீழ் பணி செய்ய வாய்ப்புக்கிட்டிய ஒவ்வொருவரும் சொல்லிப் பெருமைப்படுகின்றனர்.

சமயப்பணி புரிபவர்கள் தொண்டு ஆன்மீகத் துறையோடு மட்டும் என்று வரம்பு கட்டி வாழ்ந்திராதவர்—பல ஏழைக் குடும்பங்களின் பொருளாதார நிறைவு, ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சி என்பனவற்றுக்காக பல நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உதவி செய்து மற்றவர்கள் வாழ்வில் வளம் கொழிக்க உதவியவர்.

இத்தனை நன்மைத் தனங்களைக் கொண்ட ஒருவரது பிரிவு பேரிழப்பு என்று கூறுவது, அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும். அதே வேளையில் அவரது இழப்பினுல் ஏற்பட்ட இடைவெளி இப்போதே நிறைவு செய்யப்பட முடியாதது என்பதும் உண்மை.

தோமஸ் கூறே ஆண்டகை அவர்கள் கருதினுலாக நியமனம் பெற்றது இலங்கைக்கு ஒரு கருதினுல் தேவை என்பதற்காகவல்ல, அமல மரித்தியாகிகளின் சபையின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்படும் கருதினுலின் வாய்ப்பே அன்றையப் பேராயராகவும் அனைத்துக் தகமைகளும் பெற்றவராகவும் இருந்த தோமஸ் கூறே ஆண்டகை அவர்களுக்கு வழங்கப்பட்டது. அந்த நியமனம் இன்னுமொரு இலங்கையருக்கு இப்போதைக்கு வழங்கப்படும் வாய்ப்பில்லை. எனவே அவர்களின் இழப்பு பேரிழப்பன்றி வேறென்ன ?

குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ள தூஉம் அன்று.

## தேனருவி

கிறிஸ்து அரசர் பெருவிழா (20–11–88)

### உமது அரசு வருக

தேர்தல் காலம், அதனுல் அரசியல் தலைவர்களும், கட்சிகளும் முந்தியடித்துக் கொண்டு தேர்தல் பிரச்சாரத்தில் குதித்து விட்டனர். ஒவ்வொருவரும் தாம்தான் ஆளத் தகுதி படைத்தவர் எனத் தங்களுக்குத் தாமே விளம்பரம் செய்கின்றனர்.

நாக்குப் புரளும் பக்கத்திற்கெல்லாம் தம் கொள்கைகளையும் மாற்றிக் கொள்ளுகிருர்கள். அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்பதற்காக மக்களையே கூறுபோட்டு வன் செயல்களைக் கூடத் தூண்டி விடுகின்றனர். இப்படிப்பட்ட அநீதியும், சுயநலமும், பொய்மையும் போலிகளும் நிறைந்த சமுதாயத்தில் கிறிஸ்து அரசர் விழாவைப் பெருவிழாவாகக் கொண்டாடித்தான் பயன் ஏது? வாழ்வும், விழாவும் என்றும் சந்திக்காது தொடர்ந்து செல்லும் இரயில் பயணங்கள் போலவே காணப்படுகின்றன ஆயினும் முரண்பாடுகள் மத்தியில் தான் மிளிர வேண்டியது. மக்கள் எதிர்பார்த்த ஓர் அரசியல் தலைவனுகக் கிறிஸ்து தோன்றவுமில்லை, ஒரு வல்லரசை நிலை நாட்ட அவர் முயற்சிக்கவுமில்லை, "எனது அரசு இவ்வுலகைச் சார்ந்தது அல்ல', என பிலாத்துவுக்கு யேசு விடைபகருகின்ருர். அவர் போதித்த இறையரசு ஒரு எல்லையையோ, கட்சியையோ குறிக்காது இறைவனது அரசாட்சியையே குறிக்கின்றது.

இறைவனது அரசாட்சியில் அன்பு, நீதி, உண்மை, சமாதானம், சகோதரத்துவம் பெரும் வெள்ளமாகப் பாய்ந்து பரவும். இவரது ஆட்சியின் மகிமையும் சிறப்பும் ஒருநாள் வெளிப்படும் என்பதுதான் இறைவாக்கினர் தானியேலினதும் புனித அருளப்பரினதும் கனவு; விண்ணரசு உங்களிடையே என்று போதித்த இறைமகன் யேசு அவரது ஆட்சியை ஏற்கனவே தமது வருகையால் ஏற்படுத்தி விட்டார். அது கடுகுமணி போன்ற சிறிய ஆரம்பமாகவும் ஆனுல் பெரு விருட்சமாக வளரும் சக்தி கொண்டது. இறையரசை முதலில் தேடுங்கள் என்று அதில் அங்கம்வகிக்க அழைப்பு விடுக்கும் யேசு உண்மையைச் சார்ந்தவர்கள் தன் குரலுக்குச் செவிமடுக்கின்ருர்கள் என்ருர்.

எனவே ஒவ்வொருவரும் அவரது ஆட்சியில் இணைய மனமுவந்து தம்மை அர்ப்பணம் செய்யவேண்டும். இறையரசுக்குச் சேர்வது கிறிஸ்தவத்தைத் தழுவும் மதமாற்றம் அல்ல, ஆனுல் அது பெரும்மன மாற்றம். மதமாற்றம், மனமாற்றத்தின் வெளி அடையாளமாகலாம். இந்த அடிப்படைத் தீர்மானத்தை எடுத்த ஒவ்வொரு மனிதனும் கிறிஸ்து அரசரைத் தன் இதயத்தலைவனுக ஏற்கின்ருன்.

இல்லங்களில் திரு இதய அரசாட்சி நிறுவுதலும் அதன் நிழலில் வாழ்வதும் அவர் அரசாட்சியை ஏற்றவர் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

எனவே அவர் அரசு வருக என்று செபிப்பதோடு நிற்காது எம்வாழ்விலும் அவர் அரசின் மதிப்பீடுகளைப் பிரதிபலித்து அதன் வளர்ச்சிக்கு எம்பங்களிப்பைச் செய்வதுமே இப் பெருவிழாவின் பொருளாகும்.

சுவாமி ஜீவா போல் அ ம.தி.

தானி: 7: 13—14 அவரது ஆட்சி என்றென்றும் நீடிக்கும்.
திருவெளி: 1: 5—8 நம்மை அரசகுல குருக்களாக்கினுர்.
அரு: 18:33—37 உண்மைக்குச் சாட்சியம் கூறுவதே எனது பணி

## யாழ். நகரில் பிராங் டவ் நினைவு தினம்

மரியாயின் சேனை ஸ்தாபகரான பிராங் டவ் அவர்களின் தினம் 6-11-88 சனிக்கிழமையன்று யாழ். கொமிற்சியத்தைச் சேர்ந்த சேனையாளரால் நினைவு கூரப்பட்டது.

இதையொட்டி யாழ். பேராலயத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் மறை மாவட்டத்தின் பல பகுதிகளிலுமிருந்து அநேக சேனையார் கலந்து கொண்டனர்.

நினைவுப்பலி அருள் திரு. கிறிஸ்தோபபர் அடிகளாலும், அருள்திரு. எஸ். ஜே. இம்மானுவல் அடிகளாலும் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இதனையடுத்து அருள்திரு. எஸ். ஜே. இம்மானுவல் அவர்கள் உரை நிகழ்த்துகையில், "பொது நிலையினர் பணிக்கு அடியிட்ட பிராங் டவ் புனிதத்துவம் அடைவதற்கு எமக்கு ஓர் முன்மாதிரியாக விளங்குபவர். நாம் புனிதர்களைப்பற்றி கொண்டுள்ள கருத்துக்களுக்கு மாருக அவர் ஒரு சாதாரண கிறிஸ்தவராக வாழ்ந்தவர்" என்றும் தாம் அண்மையில் கொண்சீலியத் தலைவரைச் சந்தித்தபோது பிராங் டவ்வுக்கு புனிதர் பட்டம் அளிக்கப்படுவதற்கு முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்ததாகவும் கூறினுர்.

மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்ட சூழ்நிலையை அவர் எடுத்து விவரிக்கையில் இரு உலக மகாயுத்தங்களுக்கு இடையில் உலகில் பலவிதப் பிரச்சினைகள் நிலவிய காலகட்டத்தில் இது ஏற்படுத்தப்பட்டது இறை செயல் என்ருர்.

மேலும் அவர் "இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன் பொது நிலையினர் திருச்சபை அதிகாரிகளுக்கு உதவியாக அவர்களது பணிகளில் பங்குகொள்வதே முதற்கட்டமாக இருந்தது. வத்திக்கான் சங்கத்தின் பின்னர் திருநிலையினரின் பணிக்குத் துணை புரிவது மட்டுமல்லாது பொது நிலையினருக்கென்று சிறப்பான பணியொன்று உண்டு என்பது உணரப்பட்டுள்ளது. இதை உணர்ந்து செயலாற்றுவதே இரண்டாவது கட்டம்" எனக் கூறினுர்.

மரியாயின்சேனை 1921ஆம் ஆண்டு அயர்லாந்திலுள்ள டப்ளின் நகரில் பிராங் டவ் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது அது உலகின் பெரும்பாலான நாடுகளில் பரவி பொது நிலையினரின் அப்போஸ்தல இயக்கமாக விளங்கி வருகின்றது. பிராங் டவ் அவர்கள் 1980-ம் ஆண்டு நவம்பர் 7ஆம் திகதி இறைபதமடைந்தார். அருள்திரு. எஸ். ஜே. இம்மானுவல் அவர்கள் அவரை நேரில் கண்டு உரையாடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாங்குளப் பங்கில் மரியன்னைப் பக்தி

செபமாலை அன்னையின் மாதமாகிய ஐப்பசி மாதம் முழுவதும், மாங்குளம் பங்கிலுள்ள அனைத்துக் குடும்பங்களும், "நாட்டின் சமாதானத்திற்காகவும், எல்லா மக்களின் நல்வாழ்வுக்காகவும்" குடும்பச் செபமாலை செபிக்க ஊக்குவிக்கப்பட்டார்கள். அத்தோடு சனிக்கிழமை தோறும் ஆலயத்தில் எல்லாமக்களும் ஒன்று கூடிய விசேட வழிபாட்டில் கூடி திருச்செபமாலையோடு பங்கேற்றனர். இதனை முன்னிட்டு எமது சிந்தனைக்கு மரியன்னையை மையமாக வைத்து பல கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

பதில் பங்குத்தந்தையாக கடமையாற்றும் அருட்திரு லீனஸ் சொய்சா (அ. ம. தி.) அடிகளாரின் அருளுரைகளுடன் கூடிய திருச்செபமாலையும் தியானமும், அன்னைமரி மீது பங்குமக்களின் தாய்ப்பாசத்தையும், பக்தியையும், பெருகச் செய்தது.

நன்றித்திருப்பலியோடு வழிபாடுகள் இனிதே நிறைவு பெற்றன.

தகவல்:- புஸ்பா திரேசா.

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

# பொதுநிலையினரின் அப்போஸ்தலிக்க பணி

வங்காலைப் பங்கின் பக்திச் சபைகளை ஒன்றுகூட்டி பங்குத் தந்தை அருள்திரு. அருள்நாதன் அடிகள் ஒ விடயமாகக் கலந்துரையாடல் கருத்தரங்கு நடத்தினார்கள். 6-10-88 வியாழன் மாலை 5-30 மணி அளவில் கூட்டம்புனித ஆனாள் ம. வி. மண்டபத்தில் நடைபெற்றது. இன்றைய காலகட்டத்தில் நாம் அமைதியற்ற சூழ்நிலையில் அச்சம் குடிகொண்டவர்களாய், நிம்மதி குழம்பியவர்களாய், வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அரசியல் நெருக்கடிகளும், வன்செயல்களும், சமயப்பிரிவினைகளும் தலைதூக்கிச் சமாதானம் அற்றவர்களாகச் சஞ்சலப்படுகின்றோம். மறுபுறம் இறைநம்பிக்கையிழந்து உலோகாயுதக் கொள்கைகட்குள் சிக்கி, நவீனங்களின் மாய்கைகளில் மயக்கமுற்று மானிட நிலையினும் கீழாகத் தள்ளப்பட்டுள்ளோம். இதற்கெல்லாம் காரணத்தை நன்குக ஆராய்ந்தால் நாம் இறைவனின் வார்த்தைகளைப் புறக்கணித்து இறைவனின் நற்செய்திக்கு நம் வாழ்வில் இடம் அளிக்காமையே என்போம். விஞ்ஞான உலகில் வேகமாக முன்னேற்றம்காண, தவறுன வழியிலே நம்மை மாற்றிக்கொள்கிறோம்.

அழிவினின்று சமுதாயத்தை விடுவிக்கவும், நன்மைகளை, நற்செய்திகளை மக்களுக்குப் பரப்பவும் பத்திச்சபைகள் திடம் கொண்டு முன்வரவேண்டும். விழிப்புணர்வு கொண்டவர்களாகச் சவால்களை ஏற்றுச் செயற்படவேண்டும். இதனையே இன்றைய உலகம் திருச்சபையிடம் எதிர்பார்க்கின்றது. புனித சின்னப்பரின் திருமடல் 2 தீமோத்தேயு 4:2-5 வசனங்களை எடுத்துக்காட்டி 2ம் வத்திக்கான் சங்கம் பொதுநிலையினர் கடமைகளையும் சுட்டிக்காட்டி, பெயரளவில் பக்திச் சபைகளையோ அங்கத்தவர்களையோ நிரப்பாமல், பொதுநிலையினர் அனைவரும் விழிப்புணர்ச்சியோடு இறையரசைக் கட்டிஎழுப்பச் செயற்படுங்கள்'' என அறைகூவினர்கள்.

அதனைத் தொடர்ந்து பொதுநிலையினர் குழுத்தலைவர் திரு. கி. எ. மிராண்டா அவர்கள் செபமாலையை ஓதும் பக்திச் சபைகளைப் பாராட்டி, நாம் நாட்டின் சமாதானத்துக்காகவும், நம்மை அழிவில்நின்று காக்கவும் குடும்பச் செபமாலையைக் கைவிடாது செபிக்கவும் வேண்டுமெனக்கேட்டுக்கொண்டார்கள்.

V. A. லெம்பேட்

# ஊறணிப் பங்கில் சேவைநலம் பாராட்டு விழா

ஊறணிப் பங்கில் கடமையாற்றி மாற்றலாகிச் செல்லும் இறைபணியாளர்களாகிய மறை ஆசிரியர் ஒ மரியதாஸ், ஜெயசீலன், துணைப் பங்குத் தந்தை அருள்திரு. ஆர். சூசைநாதன் அருள்சகோதரி நசரேத், (அதிபர், ஊறணி எமிலியானுஸ் கனிஸ்ட வித்தியாலயம்) ஆகியோரின் சேவை நலன் பாராட்டு விழா அருள்தந்தை பீற்றர் துரைரெட்டினம் அவர்கள் தலைமையில் நன்றித் திருப்பலியுடன் ஆரம்பமாகியது

''தலைவர், தமது உரையில், மறையாசிரியர் எம்முடன் நெருங்கி உடனுழைத்து, பொதுநிலையினரை, இறைகலமாக உருவாக்குவதிலே அளப்பரிய பணியாற்றியுள்ளார்.

துணைப்பங்குத் தந்தையின் சேவை மிகக் குறுகிய காலமாகும், இவர் தனது சேவைக் காலத்தில் மனித மதிப்பை மதித்து அவர்கள் உண்மை விடுதலை அடைய ஊக்குவித்து, கிறிஸ்துவ மதிப்பீட்டை அவர்களிடையே வளர்த்து பிரச்சனைகளைத் தீர்த்து, நம்பிக்கைச் சூழலை ஏற்படுத்தி மக்களின் நல்வாழ்க்கைக்கு ஒளியாகத் திகழ்ந்தார்.

அருள்சகோதரியின் சேவை, பாடசாலையோடு மட்டும்நின்றுவிடாது, அப்போஸ்தலிக்க பணியிலும், சமூகத் தொண்டிலும் ஈடுபட்டார். இத்தொண்டில் எத்தனை பிரச்சனைகள் வந்தாலும் ''மனங்கோணுது ''இன்னு செய்தார்க்கும் இனியனக் கூறி'' அரும்பணியாற்றியுள்ளார்'' என்றூர்.

இதனை அடுத்து, இறைபணிச் சபையினர், பொதுநிலையினர் மாற்றலாகிச் செல்லும் இறை பணியாளர்கள் மூவரினதும் சேவைகளைப் பாராட்டி உரையாற்றினர்கள்

இவர்கள் தமது அப்போஸ்தலிக்க பணியில், சமூகத்தில், சகோதரத்துவ, சமத்துவ, மதிப்பீட்டை வளர்த்து நீதி வாய்ந்த ஓர் சமூகத்தை கட்டி எழுப்புவதில் அக்கறை காட்டினர். சிதைவுண்ட குடும்பங்களை ஒற்றுமையாக்குவதில், ஏழைகட்கு உதவுவதில், குடும்ப அப்போஸ்தலத்துவத்தின் முக்கியத்துவத்தை மக்கள் மனதில் பதியச் செய்தலில், குடும்ப அங்கத்தவர் கடமையை உணர்த்துவதில் தவறியபோது ஊக்கப்படுத்துதலில், பொறுப்புணர்ச்சியை ஊட்டுவித்தலில் எவ்வித சிரமத்தையும் பாராது செயற்பட்டனர்.

இவர்கள் மூவரும் தமது நன்றியுரையில் மக்களின் ஒற்றுமை, ஒத்துழைப்பின்றி எவரும், எதனையும் செய்ய முடியாதென்றனர். பின்னர் பங்குமக்கள் சார்பாக அன்பளிப்புகள் வழங்கப்பட்டன.

கிராம முன்னேற்றச்சங்க செயலர் திரு. அ. கீதபொன்கலன் வைபவம் சிறப்பாக நடக்க ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்தார். கலை நிகழ்ச்சியுடன் வைபவம் இனிதே முடிவுற்றது.

தகவல்: வ. அ. இம்மானுவேல்

# பரிசுத்த செபமாலைமாதா திருநாள்

கடந்த ஒக்டோபர் மாதம் 15-ம் 16-ம்திகதிகளில் நடைபெற்ற பரிசுத்த ஜெபமாலை மாதா வருடாந்த திருவிழாக் கொண்டாட்டம், இறைவாக்கும், கன்னிமரியாளும்' என்ற மையக் கருத்தைக் கொண்டு கொண்டாடப்பட்டது.

இக்கருத்தைக் கொண்டு, விழாவை சிறப்பிப்பதற்காக நான்கு வலையங்களாக பிரிக்கப்பட்டுள்ள செம்பியன் வலையம், லெச்சுமித்தோட்டவலையம், வெஞ்சர் வலையம், பொகவந்தலாவ வலையங்களில் முறையே, கடந்த 09, 10, 11, 12, ம் திகதிகளில் நவநாள் பூசை நடைபெற்றது. இதற்கு சிறப்பு அருளுரையாற்றுவதற்காக அருட்திரு. ஜேக்கப் பெர்னண்டோ S. J. அடிகளார் அழைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

15-10-1985 சனிக்கிழமை மாலை 6.30 மணியளவில் சற்பிரசாத ஆராதனை அருள்திரு. கிரகரி அவர்களாலும் பங்குத்தந்தை அருள்திரு. D. M. சேவியர் அவர்களாலும் நடத்தப்பட்டது. பின் அருள்திரு. நேரியோ ஏபிரகாம் அவர்களின் தலைமையில் வருகை தந்திருந்த நுவரெலியா மறைக்கல்வி நிலையத்தாரால் மேற்கூறிய கருத்தைக் கொண்ட நிழல்படங்களும், (slide show) திரைப்படமும், காட்டப்பட்டன.

16ம் திகதி காலை 7.00 மணிக்கு திருப்பலியும், கூட்டுப் பலிப்பூசை காலை 9.30 மணியளவில்அருள்திரு. D. M. சேவியர், O. S. B. நேரியோ ஏபிரகாம் அவர்களாலும் நடத்தப்பட்டது.

பூசையின் பின் சற்பிரசாத சுற்றுப்பிரகாரம் இடம்பெற்றது. இறுதியில் அருள்திரு. நேரியோ ஆபிரகாம் மறையுரை நிகழ்த்தினூர். இதில் இவ்வுண்மையை எதிர்காலத்தில் எமது மத்தியிலும், முக்கியமாக தோட்ட கிறிஸ்தவர்கள் மத்தியிலும், செயல்படுத்துவதாக தீர்மானித்துள்ளார்கள். விழா மிக சிறப்பாகவும், அமைதியுடனும், நடைபெற்றது.

## வங்காலையில்
# புனித திரேசாள் சபை

வங்காலைப்பங்கு மக்கள் அதிகமானேர் அகதிகளாக அமரர் அருள்திரு. மேரி பஸ்ரியன் அடிகளாரின் படுகொலை நிகழ்ச்சிக்குப்பின் இந்தியா சென்றபின் சில பத்திச்சபைகள் உயிரற்ற நிலையில் இருந்து தற்போது பங்குத்தந்தையின் அயராத அழைப்பினல் புனித தெரேசம்மாள் சபை மீண்டும் துளிர் விட்டு ஐப்பசித்திங்கள் 1-ம் நாள் மாலை 5 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுத்துத் திருவிழாக் கொண்டாடியது. இச்சபையை மீண்டும் கட்டி எழுப்ப அருட்சகோதரிகள் மிகவும் சிரமப்பட்டு இப்போது 40 இளம்பெண்கள் சேர்க்கப்பட்டு வெகுஉற்சாகமாகச் செயற்படுவதையிட்டு பங்குத் தந்தை அருள்திரு அருள்நாதர் அடிகள் பாராட்டுகையில் ''புனிதை, கன்னிகையர்களுக்கும் இளம் பெண்களுக்கும் முன்மாதிரிசையாகத் திருச்சபையில் விளங்குகின்றாள். வறுமை, துன்பம், வேதனை வருத்தங்கள் அனைத்தையும் பொறுமையுடன் கிறிஸ்துவில் கொண்ட அன்பினல் ஏற்றுக் கொண்டாள். அறைக்குள்ளே அடங்கி அவள் செய்த மாபெரும் செயல்களை நாமும் சிந்தித்து இதயசுத்தி, பொறுமை பணிவு, ஆன்ம வாஞ்சை கொண்டு புனிதையைப் பின்பற்றி இன்றைய சவால்களை ஏற்று மகிழ்ச்சியோடு வாழ முன்வரவேண்டும். தேவனின் அழைத்தலுக்கு நம்மை அர்ப்பணிக்கவும் தயாராகவேண்டும்'' என்றும் கேட்டுக்கொண்டார்.

# கொடித்தினம்

புனிதவின்சென்ற் டி போல் திருவிழா 27-9-88 ல் நடந்த போதிலும் 2-10-88 அன்று ஞாயிறு பூசையில் மிகவும்பக்தியாகப் புனிதவின்சென்டி போல் சபையினர் செயலாற்றிப் பங்கு பற்றினர்கள் பூசை முடிவில் கொடிகள் விற்கப்பட்டன 5-10-88 மாலை 5 மணிக்கு சபையினர் ஒன்று கூடியபோது தலைவர் திரு. கொ. திருச் செல்வம், வாஸ் ''சபையின்வளர்ச்சிக்கு அங்கத்தவர்கள் இன்னும் அதிகம் உழைக்கவேண்டும்'' எனக் கேட்டுக்கொண்டார். பங்குத் தந்தை அருள் தந்தை அருள்நாதன் அடிகள் புனித வின்சென்ற்டிபோல்சபை ஆங்கே வாழ்வோடு மட்டும் இயங்குவதில்லை கிறிஸ்துவின் பணியில் சமூகசேவையில் நோயாளிகளைப்பராமரித்தல், ஏழைகளுக்குதவுதல், அநாதைகளுக்கு ஆறுதல் அளித்தல், சிறைப்பட்டோர்க்கு உதவுதல் ஆகிய நற்கிரிகைகளில் அதிகம் ஈடுபட்டுழைப்பதைக் காண்கிறோம். எம்கிராமப்பக்திச் சபைகளுக்கு இது எடுத்துக்காட்டாக இருக்கிறது எல்லாப் பக்திச்சபைகளும் ஒழுக்கத்தைப் பெரிதாகப்பேணவேண்டும். தனிநபர் ஒழுக்கம் இரண்டிலும் பக்திச்சபை இணைந்து பயணம் செய்யவேண்டும்'' என்று மிகவும் வலியுறுத்தினர்கள். பொதுநிலைக்குழுத்தலைவர் திரு. மிராண்டா அருட் சகோதரி ஏஞ்சல் ஆகியோரும் அறிவுரைகள் வழங்கினர்.

# கைவிடப்பட்டவர்களின் புனிதர் திருவிழா

அரியாலை புனித யூதாததேயு திருநாள் ஐப்பசி மாதம் 28-ம் திகதி கொண்டாடப்பட்டது. அதற்கு ஆயத்தமாக முதல் மூன்று நாட்களும், ஆபத்த வழிபாடுகள் நடைபெற்றன திருநாள் மறையுரைகளை அருட்தந்தையர்கள் ஞானரத்தினம், ஜெரூட்சவரிமுத்து, கமிலஸ் நிமலன் ஆகியோர் வழங்கினர்.

முதல்நாள் உதவிப்பங்குத் தந்தை ஞானரத்தினம் அடிகளார் ஆற்றிய அருளுரையில், 'நூற்றுவர் தலைவனின் விசுவாசத்தை அடித்தளமாக வைத்து விசுவாசம் செயலுடன் கூடியதாக இருக்கவேண்டும்'' என்று வலியுறுத்தினூர்.

இரண்டாம் நாள் ''செபம் வேண்டுதலாக மட்டும் அமையக்கூடாது என்றும், இறை ஆராதனை - இறை அன்பு- நன்றி - வேண்டுதல் - மன்னிப்பு ஆகிய அம்சங்களை அடித்தளமாக வைத்துச் செபம் செய்ய வேண்டும்'' என்று அருட்தந்தை, ஜெறூட்அடிகளார் எடுத்துரைத்தார்.

நற்கருணை வழிபாட்டில் அருட்தந்தை கமிலஸ் அடிகளார் நற்கருணையின் மகத்துவம் பற்றியும், நல்ல கனி தருகின்ற மரங்களாகநாம் இருந்து நற்கருணைநாதருக்கு எம் அன்பை அளிக்கவேண்டும் என்றும் எடுத்துக் கூறினூர். 28 ம் திகதி, காலை 7 மணிக்கு அருட்தந்தை கமிலஸ் அடிகளாருடன், அருட்தந்தையர்கள் ஞானரத்தினமும், சகாயதாசனும், சேர்ந்து கூட்டுத் திருப்பலியை நிறைவேற்றினர். புனித யூதாததேயு கிறிஸ்து போதித்த இறைஅரசு இவ்வுலகிற்குவர அவர் ஆற்றிய பணியினுலும், தளராத விசுவாசத்தினுலும் கிறிஸ்துவுக்காகவே தனது உயிரையும், தியாகம் செய்தார் என்று, அருளுரை வழங்கினர்.

இறுதியில் மறையுரைகளை வழங்கிய அருட்தந்தையர்களுக்கும், கூட்டுத்திருப்பலியில் பங்கு பற்றிய அடிகளாருக்கும் நன்றிகூறிய உதவிப்பங்குத் தந்தை பிரியாவிடைச் செபத்துடன், திருச்சுருப ஆசீரையும், வழங்கி விழாவை இனிது நிறைவேற்றினூர்

# உதயநகரில் முதற்திருப்பலிப் பூசை

கிளிநொச்சிஉதயநகர் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் இதுவரை காலமும் திருப்பலிப் பூசை ஒப்புக் கொடுக்காதது மக்கள் மனதை உறுத்திக் கொண்டுபெரும் குறையாக இருந்தது. இக்குறையை நீக்கும் பொருட்டு கிளிநொச்சி பங்குத் தந்தை வண. ப. இருதயதாஸ் அடிகளார் எடுத்தபெருமுயற்சியினுல் ஐப்பசி மாதம் 27-ம் திகதி இவ்வாலயம் விழாக் கோலம் பூண்டது.

தமிழர் பண்பாட்டிற்கமைய மலர்மாலை அணிவித்து ஆலயத்தை ஆசீர்வதித்து முதற் திருப்பலிப்பூசையை நிறைவேற்றி மக்களின் நீண்ட நாள் குறையை நிவர்த்தி செய்தார்.

பி. இராசநாயகம்
ஆலய செயலாளர்

# எறும்பூர....

சிறுகதை

"அப்பாடா நடந்து நடந்து காலெல்லாம் வீங்கப்போகுது. இந்த முறையென்றாலும் ஒரு சைக்கிள் வாங்கவேணும்" தனக்குத் தானே கூறிக்கொண்டு கதிரையில் 'தொம்' என்று இருந்தான். சந்திரன் அருகில் இருந்த மற்றைய நாற்காலியை முன்னுக்கு இழுத்துப் போட்டு அதன் மேல் காலைத் தூக்கி வைத்துக்கொண்டு "அம்மா தேத்தண்ணீ..." என்று குரல் கொடுத்தான்.

இரண்டு மைல் நடந்த களைப்பு அவனுக்கு ஆசுவாசமாக வசதியாகச் சாய்ந்து தூங்கவேண்டும்போல் தோன்றியது. யன்னலூடாகப் பாய்ந்து வரும் இனிய தென்றலை அனுபவிக்க எண்ணி மெல்லப் பக்கவாட்டில் தலையைத் திருப்பியவனுக்கு அதிர்ச்சி, சோர்வு ஓடிவிட்டது.

யாரது புதுசாக இருக்கின்றதே. அழகாக நேர்த்தயாக சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கும் இந்தப் பெண் யார்? அவனையும் அறியாமலேயே அவன் கண்களில் நீர் சுரந்தது. நினைவுகள் எங்கேயோ சென்றுவிட்டன என்பதை அவனது நிலைக்குத்திய பார்வை சொல்லியது பார்த்தான், பார்த்துக் கொண்டே இருந்தான்.

தாய் வந்து தொட்டவுடன் தான் திடுக்கிட்டான். "அம்மா அது யாரு" என்று யன்னலூடாக அடுத்த வளவைச் சுட்டிக் காட்டினன்.

"அது புதுசா குடி வந்திருக்கினம. நீ போனதுக்கு பிறகு தான் வந்தவை. இது மூன்றாவது பிள்ளை என்று நினைக்கிறன். இதுக்கு நேரே இரண்டு பெட்டைகள் கலியாணம முடிச்சுப் போயிட்டினமாம். இந்தப பிள்ளை படிக்குது. தகப்பன் இல்லை. பாவம் மனிசி கஸ்ரப்படுகுது"

பாடம் சொல்வது போல் சொல்லிவிட்டு கோப்பையை எடுத்துக்கொண்டு போய் விட்டாள், சந்திரனுக்கு ஆச்சரியம், இந்த அம்மா எப்படி இவ்வளவு கெதியாக விபரங்களைச் சேகரித்து விட்டாள். இந்தப் பெண்களே இப்படித்தான் ஊரார் விஷயம் அறிய முன்னுக்கு நிற்பார்கள். என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டான்.

அவர்கள் வந்து ஒரு வாரமாகி விட்டது. சந்திரனுக்கு அவளைப் பார்க்கப் பார்க்க ஆசையாக இருந்தது. அவளைப் பார்க்கும் போது இறந்து போன தங்கையின் நினைவு அடிக்கடி வந்துகணணைக் குளமாக்கிக் கொண்டிருந்தது. "என்ர தங்கச்சி இருந்தால், நான இப்ப என்னமாதிரி வச்சிருப்பன்." தனித்து விட்ட ஒரே ஒரு பிள்ளையான அவனுக்கு சகோதர பாசத்தின் அருமை புரிந்தது. 'இந்தப் பக்கத்து வீட்டுத் தங்கச்சியோடே ஒரு வார்த்தையென்றாலும் கதைக்க வேண்டும். இல்லாவிட்டால் எனக்குப் பைத்தியம் தான் பிடிச்சுப் போடும்.' என்று தீர்மானித்துக் கொண்டான். தீர்மானம் நிறைவேறும் சந்தர்ப்பம் அடுத்த அரை மணி நேரத்திலேயே கிடைத்தது. அவனுக்கு ஆச்சரியம். வாசலிலே பத்திரிகை பார்த்துக் கொண்டிருந்தவன் 'அண்ணு' என்ற இனிமையான குரல் தந்த அதிர்ச்சியில் எழுந்து நின்றான்.

மஞ்சுளா...அதுதான்பக்கத்து வீட்டில் அவன் பார்த்த மானசீகத் தங்கை; கையில் கூடையுடன் நின்று கொண்டிருந்தாள். இவனுக்கு மின்சார அதிர்ச்சி போல் அவள் அழைத்த அந்தச் சொல்கள் ஊடுருவிப் பரவ, இன்ப வெள்ளம் பொங்கிப் பிரவாகித்து ஊற்றெடுக்க "என்ன மமா வேணும்" என்ற அவன் வார்த்தையிலும், அவனையும் அறியாமல், பாசம் புகுந்து கொண்டது.

"அம்மாவுக்கு இரண்டு நாளாக நல்ல காய்ச்சல் அதனால கடைக்கும் போகேல்ல. எனக்கும் இன்னும் ஒரு இடமும் பழக்கம் இல்லை. அது தான்... உங்களால ஒருக்கா கடைக்குப் போய்வரஏலுமா?" கேட்டுவிட்டு தயக்கமாகப் பார்த்தாள்.

"அதற்கென்ன நான் செய்யிறன் உடனே வாங்கி வாறன் அம்மாவுக்கு சுகமாகு மட்டும் என்னால ஏலுமானதைச் செய்துதாறன். ஏதும் தேவையென்றால் தாங்காமல் அண்ணன் என்று நினைத்துக் கொண்டு கேளுங்கோ"

கூறிவிட்டுக் கூடையை வாங்கிக்கொண்டு வேகமாக நடந்தான். நடப்பதில் இருக்கும் வெறுப்பு போன இடம் தெரியவில்லை,

இப்படித்தான் ஆரம்பித்தது இந்த அபூர்வ அண்ணன் தங்கை உறவு கள்ளமில்லாமல் பெருகிய அன்பு உறவு கரைகாண முடியாத அளவாக சந்திரனின் மனதில் விசாலமாகியது. மஞ்சுளாவின் சாயலில் தனது தங்கையைக் கண்டான். அவன் பதில் அன்பைக் கொட்டினாள் மஞ்சுளா.

ஆனால் ஊரார் தமது மனமென்னும் ஓட்டை வேலியால், பொத்தல் விழுந்த பிய்ந்து போன வேலியால் பூந்து, புகுந்து பார்த்தனர். அவர்களின் கூர்மையான, கொடிய பார்வைக்கு இந்த இளம் குருவிகள் பலியாகிக் கொண்டிருந்தன,

"சந்திரனுக்கும், மஞ்சுளாவுக்கும் தொடர்பாம்" கண், காது, மூக்கு வைத்து ஜோடித்த அருமையான, அபூர்வக் கதை முழுமையாக அவனின் காதில் விழுந்த போது அதிர்ந்தே விட்டான். மஞ்சுளாவும் துடித்துப் போனாள்,

அழுகை பீரிட்டுக் கொண்டு வந்தது அவனுக்கு. ஒரு ஆணும் பெண்ணும் அன்பாகப் பழகினால் அது தவறா? காதலைத் தவிர அந்த அன்பில் சகோதர பாசம் என்பதே இருக்கக் கூடாதா, இது என்ன சமூகம். எங்கட சமுதாயத்திற்கு எப்பவும்ம தவறான கண்ணோட பார்த்துப் பார்த்து கண் அவிஞ்சு போச்சு. சமமாகப் பழகினால், அதைக் கறைபடுத்துகின்ற சமுதாயம் எப்பவுமே ஒரு முற்போக்கானவன் இருந்தால் அவனுக்கு கெட்ட பெயரும், எதிர்ப்பும்தான். எப்ப இந்த மக்களின் ஓட்டை விழுந்த மனங்கள் அடைக்கப் படுகின்றதோ அப்ப தான் இந்த இனமே உருப்படும். 'பாவம் மஞ்சுளா எனக்கே இப்படி இருக்கிறதென்றால் அவளுக்கு எப்படியிருக்கும.' இரண்டு நாளாக இந்தப் பக்கமே அவளைக் காணேல. இந்தச் சனத்தின், கட்டுக் கதையைக் கேட்டுப் பயந்திட்டாளோ என்னவோ, ஒருக்காப் போய்ப் பார்க்க வேண்டும்' என்று நினைத்துக் கொண்டான்.

மஞ்சுளா என்று கூப்பிட்டுக் கொண்டு உள்ளே போனவன் அசாதாரண அமைதியைக் கண்டு ஒரு கணம் தயங்கினான். மஞ்சுளாவின் தாய்தான் வந்தாள்.

"தம்பி நான் சொல்லுறனென்று குறை நினைக்க வேண்டாம் இனி இங்கே நீர் வர வேண்டாம். வீணான கெட்ட பேர் எங்கட குடும்பத்துக்குத் தேவையில்லை. என்ர பிள்ளைக்கு அண்ணனும் தேவையில்ல, அண்ணியும் தேவையில்ல நீர் வராமல் இருந்தால் போதும்" படபடவென்று கூறிவிட்டு அவன் முகத்தைப் பார்க்கத் துணிவில்லாமல் உள்ளே போய் விட்டாள். வானமே இடிந்து தலையில் விழுவது போன்ற பிரமை. கடைசியில் நீங்களுமா இப்படி நினைக்கிறீங்க "என்னில உங்களுக்கே நம்பிக்கை இல்லா விட்டால் மற்றவையைச் சொல்லி என்ன குற்றம்" என்று மனம் தான் ஓலமிட்டதே தவிர வார்த்தைகள் மௌனமாக கண்ணீர் வடித்தன. அப்படியே நின்று கொண்டிருந்தான்.

எதிரே நிழலாட நிமிர்ந்து பார்த்தவன் மஞ்சுளாவின் கோலத்தைப் பார்த்து விக்கித்துப் போனான். வீங்கிய முகமும், அழுது கலங்கிச் சிவந்த கண்களும் ஊரார் மேல் கொண்ட கோலத்தை தன் மகள் மேல் காட்டிய தாயின் இயலாமையைச் சொல்லத் துடித்துக் கொண்டிருந்தன. அவனால் மேலும் அங்கு நின்று பார்க்க முடியாமல் வேகமாக வெளியேறினான்.

இப்போது மஞ்சுளா, சந்திரனின் வீட்டிற்கு வருவதில்லை. எங்காவது எதிர்ப்பட்டால் சோகமான ஒரு சிரிப்பு. அந்தச் சிரிப்பைக் கூட யாராவது பார்த்து விட்டால் போச்சு. "இவளுக்குப் புத்தியில்ல தாய் இந்த அடி அடித்தும் அவனைப் பார்த்து ஒரு சிரிப்பு வேண்டிக் கிடக்கு" என்று கூற வந்து விடுவார்கள்,

எவ்வளவோ மாதங்கள் கழிந்தவிட்டன. ஆனால் ஊர் வாய்க்கு இவர்கள் அவலாக இருந்து சுவைத்தார்கள். அந்தச் சின்ன மனதில்கூட ஒரு மாற்றம். "எறும்பூரக் கற்குழியும் என்பார்களே, அதே மாற்றம் தான். கள்ளமில்லாத இதயத்தில் கறையைப் படியவிட்டு அதற்குத் தூபமிட்டது ஊர்வாய். இருவரையும் இணைத்துப் பேசிய மஞ்சுளாவின் மனம் மாற்றப்பட்டு விட்டது

ஆம், அவள் சந்திரனை விரும்புகின்றாள். காதலிக்கின்றாள். அந்த சகோதரப் பாசம் ஊராரின் சந்தேகப் பார்வைகளாலும், வார்த்தைகளாலும் கழுவிச்செல்லப்பட்டு விட்டது. பெண்ணின் மனம் பேதலித்தது சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் அந்த விபரீத மாற்றம் அவள் நெஞ்சில் வளர்ந்து கொண்டே வந்தது. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகருமல்லவா?

ஆனால், சந்திரன் அவன் மனதில் ஆரம்பத்திலேயே அந்தச் சகோதர பாசத்தின் வித்து ஆழமாக வேரூன்றி விட்டது. கதை அவனால் எள்ளளவாயினும் மாற்றிச் சிந்திக்க முடியவில்லை.

'மஞ்சுளா மறைமுகமாக தனது காதலை வெளிப்படுத்திய போது அதிர்ந்தே விட்டான். கடைசியில் நீ கூட இப்படியா! என்று அவனால் கேட்க முடிந்ததே தவிர வாய் பேச முடியாமல் மனம் இறுகி விட்டது. "என்னை மன்னிச்சுக் கொள் மஞ்சு உன்னை என்னுடைய கூடப் பிறந்த சகோதரியாகத்தான் இது வரையில் நினைக்கிறேன். எனது மனைவி ஸ்தானத்தில் உன்னை நினைத்துப் பார்க்கவே மனம் கூசுகிறது மஞ்சுளா. நிழலை நிஜமாக்கி விட்டாலே உன்னை நினைக்கப் பரிதாபமாக இருக்கிறது. ஆனால், என்னால் என்ன செய்ய முடியும்!"

அவனால்தான் என்ன செய்ய முடியும; அவனுடைய மனம் மாறவில்லையே, ஊர் பேச்சு அவன் மனதை ஆழமாகத் தாக்கவில்லையே. அவன் தாங்கிக் கொண்டான. இவள் அதையே நிஜமாக்கிக் கொண்டாள். மனத்தின் செயற்பாடுகளுக்கு, மாற்றங்களுக்கு யார் பொறுப்பு."

இந்தச் சமுதாயத்தின் நச்சுப்பார்வைக்குப் பலியாகியவள் மஞ்சுளா தான். கள்ளமில்லாத அன்பில் களங்கமும், தூயவெண்மையில் கறையையும் படியவிட்டவர்கள் எங்கே இந்தப் பேதைப் பெண்ணின் வாழ்வுக்கு வழி சொல்லட்டும் பார்க்கலாம். அவளின் மனக் கூட்டைக் கலைத்துக் குருவிகளை விரட்டியவர்கள், அவற்றை மீண்டும் இணைத்துக் காட்டட்டும், அது அவர்களால் முடியாது. வெற்றின் வெறித்தனமான எக்காளச் சிரிப்பை மட்டுமே அவர்களால் உதிர்க்க முடியும்.

செல்வி. நெலோமி
சூசைநாயகம்
புனித சவேரியார் பெண்கள்
ம. ம. வி.—மன்னார்.

## கிளிநொச்சிப் பங்கில் ...

விசாலமான கிளிநொச்சிப் பங்கிலே மூன்று வெவ்வேறு ஆலயங்களில், வெவ்வேறு நாட்களில் உறுதிப்பூசுதல் எனும் திருவருட்சாதனம வழங்கும் வைபவங்கள் இடம்பெற்றன.

★ அமதிபுரம் என்னும், குடியேற்றக் கிராமத்தில் இத்திருவருட்சாதனம் 17. 10. 88 திங்கட்கிழமை வழங்கப்பட்டது.

★ வட்டக்கச்சிப்பங்கில் உறுதிப்பூசுதல் வழங்கும் வைபவம் 22. 10. 88 சனிக்கிழமை யாலை இடம்பெற்றது திருவருட்சாதனம் வழங்கும் திருப்பலி வட்டக்கச்சி, புனித சூசையப்பர் ஆலயத்தில் யாழ் ஆயர் பேரருள்திரு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. மலர்மாலையணிவித்து ஊர்வலமாக அழைத்துவரப்பட்ட ஆயர் அவர்களுடன் அருட்தந்தையர்கள் J. P. E செல்வராஜா, R. சூசைநாதன் ஆகியோரும் இணைந்து பங்குபற்றினர். இந்த வைபவத்தில் வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடு ஆகிய இடங்களைச் சேர்ந்த 63 பேருக்கு உறுதிப்பூசுதல் வழங்கப்பட்டது. திருப்பலியின் இறுதியில் வட்டக்கச்சியைச்சேர்ந்த ஆசிரியர் திரு. அன்ரன் அவர்களின் நன்றியுரையுடன் வைபவம் இனிதே நிறைவுபெற்றது.

தாய்ப்பங்கான கிளிநொச்சியில் 23-10-88 ஞாயிறு காலை உறுதிப்பூசுதல் வழங்கும் வைபவம் இடம்பெற்றது. திருவருட்சாதன திருப்பலி யாழ். ஆயர் அவர்கள் தலைமையில் கிளிநொச்சி புனித திரேசம்மாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத்திருப்பலியில் யாழ். ஆயர் அவர்களுடன் அருட்தந்தையர்கள் J. P. E செல்வராஜா, R. சூசைநாதன், ஆகியோரும் இணைந்து பங்குபற்றினர். இந்த வைபவத்தில் கிளிநொச்சிப் பங்கின் பல கிராமங்களைச் சேர்ந்தவர்களும் உருத்திரபுரம், மாங்குளம் முதலிய பங்குகளைச் சேர்ந்தவர்களுமாக 98 பேருக்கு உறுதிப்பூசுதல் வழங்கப்பட்டது.

திருப்பலியின் இறுதியில் கிளிநொச்சிப் பங்கைச் சார்ந்த ஆசிரியர் திரு. அந்தோனிப்பிள்ளை அவர்கள் நன்றியுரை கூறினார்.

கிளிநொச்சிப்பங்குத்தந்தை அருள் திரு. P. இருதயதாஸ் அவர்கள் உறுதிப்பூசுதல் பெற்றவர்களை நெறிப்படுத்தினர்.

மேற்படி மூன்று இடங்களிலும் உறுதிப்பூசுதல் பெற்றவர்களை தயார் செய்வதில் புனித சவேரியார் குருமடத்தைச் சேர்ந்த அருட்சகோதரர்கள் அருட்கன்னியர்கள், மறைஆசிரியர்கள் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல்:- கலிஸ்ரா.

# இளமையிற் கல்வி...

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது ஒரு முது மொழியாகும். அதுபோல் நாமும் எமது இளம் பராயத்திலிருந்தே கற்கின்ற கல்வி ஒருபோதும் எம்மைவிட்டு அகலமாட்டாது. ஆபிரகாம் லிங்கனை எடுத்து நோக்கும் போது அவர் எவ்வளவோ கஷ்டத்தின் மத்தியிலும் தன்னுடைய கல்வியை நல்லமுறையிற் கற்கவேண்டுமென்று ஆசைபட்டடு, தெருவிளக்குகளின் கீழ இருந்து படித்தார் இது எமக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். இறுதியில் இவர் அமெரிக்க ஜனாதிபதியாக வந்தார். இவர் ஓர் ஏழையாக இருந்தாலும் தன்னுடைய கல்வியறிவின் காரணமாக ஒரு பெரிய பதவிக்கு வந்தார். அதாவது ஒரு நாட்டை ஆளும் அளவுக்கு உயர்ந்தார்,

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக" என்பது திருவள்ளுவரின் பொன்மொழியாகும். இவ் வார்த்தையிலே கல்வியின் சிறப்பு அடங்குகின்றது. ஒருவன் தான் பெறுகின்ற கல்வியறிவை பிழையின்றித் தெளிவாக ஆழ்ந்த அறிவுடன் நிறைவாகக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று இக்குறள் கூறுகின்றது. கல்வியின் சிறப்பை எடுத்து நோக்கும் போது, ஒரு மனிதனுக்கு எப்பொழுதும் உறுதுணையாக இருப்பது அதுவேயாகும் ஒரு மனிதன் வளரும் போது அவனது அறிவும் வளர வேண்டும்.

ஆரம்பத்தில், "பெண்கள் கல்வி கற்கக்கூடாது, தொழில் பார்க்கக்கூடாது" என்ற பாரம்பரியம் நிலவி வந்தது, இதற்கு எதிராக மகாகவி பாரதி, பெண்களும் கல்வி கற்கலாம். தொழில் பார்க்கலாம் என்று புரட்சிசெய்தார் மகாகவியின் முயற்சியினால் பெண்களும் கல்விகற்று தொழில் வாய்ப்புக்களைப் பெறறு, உயர்ந்த நிலையை இன்று அடைந்துவருகின்றனர்.

பி. றஞ்சிற் ரூஸ்வோல்ட்
அ. ம. தி. குருமடம்,
கொழும்புத்துறை.

---

அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை,
11-11-88




அன்பு இளம உள்ளங்களுக்கு

இறந்துபோன ஆன்மாக்களை இம்மாதத்தில் சிறப்பாக நினைவுகூருகின்றோம். அவர்களது ஆன்மா சாந்தியடைய நாம் செய்துவருவனவற்றுள் சில...

* கல்லறைகளைப் பூங்காக்களாக மாற்றுகின்றோம்
* மரவெட்டு வழிபாடுகளை மேற்கொள்கின்றோம்.
* செல்வந்த உறவினருக்கு சோறு அவித்துக் கொட்டுகிறோம்.
* சஞ்சவர் காட்சியாக வீடியோவில் காட்டுகின்றோம்.

ஆனால் நாம் செய்யவேண்டியவை பல, அவற்றுள் சிலவற்றை நான் இங்கு கூறுகின்றேன்.

★ ஏழை, எளியவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த நீதியான முறையில் பங்களித்தல்.
★ ஊனமுற்றோரை உற்சாகப்படுத்தல்
★ வயோதிபர்சாலையில் முதியோரைச் சந்தித்து அவர்களுக்கு அன்பும் ஆதரவும் அளித்தல்.
★ ஆதரவற்ற சிறுவர் இல்லங்களைத் தரிசித்து அவர்களுக்கு ஏதாவதொரு வகையில் உதவுதல்

இவ்வாறு இறந்துபோன ஆன்மாக்களின் நினைவாக, நிகழ்காலத்தில் உயிர்வாழும் மக்களின் உடல், உள, ஆன்மீக நலனில் அக்கறையோடு ஈடுபட்டு சமுதாயச் சீரபடுத்தலைச் சிறப்புறச் செய்வோம்.

நல்வாழ்த்துக்களுடன்,
அன்பு நெஞ்சன் வி. பி.

---

## இளைய நாற்றுக்களே!

நமக்கு நாமே அடிமையாவதோ
நலிந்த உள்ளம் நிலைப்பதில்லையோ
எமக்கு என்றொரு இலட்சியமில்லையோ
ஏனிந்த வாழ்க்கை இனியும் நமக்கு?

கருவறைகள் இன்று கல்லறையாவதோ
கண்ணீர் அழுகுரல் காதில் விழவில்லையோ?
உருவாகும் கருவதனைச் சிதைப்பதாமோ
உயிர்க்கொலைகள் நாம் தொடர்வதாமோ?

சாதிப் பேய்கள் எப்போ சாவதாமோ
சாதிகள் இல்லையெனச் சாதிப்பதெப்போதோ
வீதிகளில் இன்னமும் வலம் வருவோ
விதியென்று நாளும் வேடிக்கை பார்ப்பதோ?

சீதனம் என்னும் சீமெந்தினால் இங்கு
காதலுக்கு ஒரு கல்லறையோ
மேனியில் மாதரை விலைபேசவோ
மாற்றமின்றி இன்னிலை நீடிப்பதாமோ?

போதைப் பொருளுக்கு நாம் அடிமையாமோ?
பொழுது போக்கிற்கு இதுவோர் போசனமோ?
பாதைகள் பலவுண்டு பைத்தியம் தெளிவதற்கு
போக்குவீர் மாய நிழல்களென இவற்றை!

'தமிழ் நேசன்'
புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை.

---

## நா – அடக்கு

"ஒரு முறை பேசுவதற்கு முன் இருமுறை சிந்தி" என்று அன்று உரைத்தான் ஓர் பெரியோன். ஓர் எண்ணம் எம் நெஞ்சில் இருப்பின் அது நமக் கடிமை. அதை வெளியே உரைத்து விட்டால் அதற்கு நாமடிமை, சிறப்பாக புதிய உலகம் அமைக்க 'இளைஞர் உலகம்' இளமையில் முதுமையினை அடைதல் வேண்டும்.

குதிரைக்கு கடிவாளம் ஏன்? கப்பலுக்கு சுக்கானேன்? ஆம் அதை முழுமையாக நாம் அடக்கவும் விரும்பிய திசையில் செலுத்தவுமே. எல்லாவற்றிலும் உயர்ந்த பொருள் நா. சில வேளை எல்லாவற்றிலும் இழிந்ததாக மாறும் சந்தர்ப்பங்களும் உண்டு இதையே, வள்ளுவனும் கவியில் வடிக்கின்றான்.

"தீயினால் சுட்டபுண்
உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு"

அன்புக் குழந்தை
முருகனை.

---

## நேற்று!

அது கடந்து விட்ட காலம் அங்கே விட்ட தவறுகள், எடுத்த தீர்மானங்கள் எத்தனையோ! அனுபவங்கள், படிப்பினைகள், நேரங்களைக் கணித்தவிதங்கள் அனைத்தும்..

## இன்று:

இங்கு ஒரு பாடமாக படிப்பினையாக அமைய வேண்டும். அதற்காக முழுநாளும் நேற்றைய நினைவுகளையே மனதினுள் வைத்திருப்பது அறிவீனமாகும்.

## நாளை:

மேற் கூறிய இரண்டு காலங்களிலிருந்தும் என் எதிர் காலம் (நாளை) எவ்வாறு கழிப்பேன் என்று உறுதியான மனமும், துணிவும், பிறழாமையும் வேண்டும். அப்போதே எதிர் கால வாழ்வில் வளர்ச்சி தோன்றும்.

D. E. ரட்ணராஜ்
இளவாலை.

---




## மனைவியின் மாண்பு

"நல்ல மனைவி கிடைத்தால் மகிழ்வுடன் இருப்பாய்: மோசமான மனைவி கிடைத்தால், நீ தத்துவ ஞானியாக இருப்பாய்" என்று தத்துவ ஞானியாகி விட்ட சாக்ரடீஸ் மொழிந்துள்ளார்.

"மனைக்கு விளக்கம் மடவாள்". வீட்டின் பெருமை மனைவியின் விளக்கான (மனை+வி) இல்லாளின குணங்களின் பிரகாசத்தைப் பொறுத்துள்ளது.

நல்ல மனைவி, "தாயைப்போல் அன்புடையவளாகவும் பணியாளனைப்போல் ஊழியம் செய்பவளாகவும். பூமியைப்போல் பொறுமையுடையவளாகவும். சுகம் தரும் நுட்பம் தெரிந்தவளாகவும், எரிகின்ற திரியைப் போன்று தியாகச் சிந்தனை கொண்டவளாகவும்" இருத்தல் வேண்டும்,

"அன்னை தயையும் அடியாள் பணியுமலர்
பெண்ணின் அழகும் புவிப்பொறையும்
வண்ணமுறும்
வேசி துயிலும் விறல்மந்திரி மதியும்
பேசில் இவையுடையாள் பெண்"
(விவேக சிந்தாமணி)

மனைவி என்பவள், "இளமைப் பருவத்தில் காதலியாகவும், நடுத்தரப்பருவத்தில் வாழ்க்கைத் துணைவியாகவும், வயோதிபப் பருவத்தில் பணிப்பெண்ணாகவும் விளங்குகிறாள்" என பிரான்சீஸ் பேகன் கூறுகின்றார்,

சந்தனக் கட்டையைத் தேய்க்கத் தேய்க்க நறுமணம் வீசம்; நல்லமனைவி சந்தனக் கட்டையை ஒத்து இருக்கவேண்டும். தன்னலம் கருதாது தன் கணவனுக்காகவும் மக்களுக்காகவும் உழைப்பதில் தன் வாழ்வை அர்ப்பணிக்க வேண்டியவள்.

ஆண், வேலையை உயிராகக் கொண்டு தன் நேரத்தில் பெரும் பகுதியை உழைப்பில் ஈடுபடுத்த வேண்டும் பெண்ணோ குடும்பப் பராமரிப்பில் கருத்து கொண்டவளாக இருக்கவேண்டும்.

பெண்ணுக்குக் கண்ணைப் போன்ற கடமைகள் இரண்டு உண்டு. ஒன்று குழந்தை நலம்; மற்றொன்று குடும்பப் பராமரிப்பு கிறிஸ்தவ குடும்பம் அமைதியும், அக்களிப்பும் ததும்பும் இல்லிடமாக இருக்க வேண்டுமென்றால் அது பெரும்பாலும் மனைவியின் பொறுப்பாகும்,

மனைவி ஒருவேளை கல்வி அறிவு அற்றவளாக இருந்தாலும்கூட பரவாயில்லை அவள் நற்பண்பினைக் கொண்டவளாக இருந்தால் அதுவே போதும். கணவன் துர்க்குணம் கொண்டவனாக இருந்தாலும்கூட, மனைவி தன் நற்பண்பினால் அவனைத் திருத்த முடியும்.

சோம்பேறி உழைப்பாளியாகவும், ஊதாரி சிக்கனக்காரனாகவும், சிற்றின்ப வேட்கை கொண்டு அலைபவன் மனைவியின் அன்பினால் கட்டுண்டு கிடப்பதும், முரடன் சாதுவாக, முட்டாள் அறிவாளியாக மாறுவதும் மனைவியின் காந்த ஆற்றலால் ஏற்பட்ட மாற்றங்கள்தாம்

---

ஒரு கணித ஆசிரியர் நோக்கில்

## உயரம் நீளமாகின்றது.

நேற்றுவரை நிலத்திற்குச்
செங்குத்தாய் நின்றிட்டான், அதனால்,
அவன் உயரமதை அளந்தார்கள் - ஏன்?
அவனுக்கு ஒரு பாஸ்போட் எடுப்பதற்கு,
இன்று குண்டொன்று பாய்ந்ததினால் அவன்
நிலத்திற்குச் சமாந்தரமாய் ஆகிவிட்டான். அதனால்
திருமூலர் சொன்னபடி "பெயரினை நீக்கிப்
பிணமென்று பெயரிட்டு"
அளக்கின்றார் அவனுடல் நீளமதை — ஏன்?
அவனுக்கு ஒரு பெட்டி எடுப்பதற்கு.
(திருமூலர் - திருமந்திரம்)

வே. சாமுவேல்.
ஆசிரியர், தெல்லிப்பளை

# அருள் வாக்கு அறிவோம்

திருமறைப்பணி நிலையம்
த. பெ. இல. 2,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## சிறிய இறைவாக்கினர் -5

### ஆமோஸ்—5

ஆமோசின் இறைவாக்குகள் கருத்தாழம் மிக்கவை. பல்வேறுபட்ட கருத்துகளையுடையவை இங்கு இவருடைய முக்கிய படிப்பினைகளைக் காண்போம்.

இறைவன் வரலாற்றின் ஆண்டவர். எல்லா மக்கள்மேலும் எல்லா நாடுகள் மேலும் அவர் ஆட்சிபுரிகின்றார். ஆண்டவர் அளிக்கும் இயற்கைச் சட்டம் யாவருக்கும் உரியது. யாவரும் அச்சட்டத்திற்குப் பணிய வேண்டும். எனவே இயற்கைச் சட்டத்தை மீறியதற்காக இஸ்ராயேல் மட்டுமல்ல, எல்லா நாட்டினருமே தண்டிக்கப் படுவார்கள் என்பது ஆமோஸ் வலியுறுத்தும் கருத்து.

நாட்டுமக்கள் ஒருவரோடு ஒருவர் நீதியோடு நடந்து கொண்டால்தான் அந்நாடு இறைவனோடு உண்மையான உடன்படிக்கை உறவு கொண்டிருக்க முடியும் என்பது ஆமோஸ் வலியுறுத்தும் முக்கிய கருத்து. ''சமூகநீதி, உடன்படிக்கைக் கடமையின் பிரிக்கமுடியாத, தவிர்க்கமுடியாத முக்கிய அம்சமாகும் என்கிறார். இப்போதுகம் மக்களுக்குள்ளே உள்ளஉறவை ஒழுங்குபடுத்தியது சமூகநீதிபற்றி ஆமோஸ் கண்டிக்கும் முதன்மையான விடயம் 'சுகபோகமிக்க வாழ்வு அநீதிக்கு வழிவகுக்கின்றது' என்பதாகும்.

வழிபாட்டைப்பற்றிய ஆமோசின் கருத்து இறைவன் விரும்புவது நேர்மையும், நீதியுமுள்ள வாழ்க்கைப் பலியாகும். இதைவிடுத்து வெளி ஆடம்பரங்களும் கொண்டாட்டங்களும் பொருளற்றவை என்பதை ஆமோஸ் வலியுறுத்துகின்றார்.

இறைவன் தீமையைத்தண்டித்து நன்மைக்கு சன்மானம் அளிக்கும் ''ஆண்டவரின் நாள்'' வரும் என எச்சரிக்கின்றார் இறைவன் மனித காரியங்களில் இடையீடு செய்து தீயசக்திகளை அழித்து மகிழ்ச்சிமிக்க நாளை மலரச் செய்வார் என்ற நம்பிக்கை யூட்டி தமது இறைவாக்கை முடிக்கின்றார்.

ஆமோஸ் இறைவாக்கினரின் படிப்பினைகள் ஆழ்ந்து சிந்திக்கத்தூண்டுபவை எம் வாழ்வை மாற்ற உதவுபவை.

கி. சா. பங்கிராஸ்

அறிந்து கொள்ளுங்கள் 59

## இலக்கிய மரபில் சீனாய் உடன்படிக்கை

சென்றவாரம் பழைய கால இலக்கிய மரபுப்படி மாமன்னன் சிற்றரசனுடன் செய்யும் உடன்படிக்கை முறைபற்றிப் பார்த்தோம். அதே மரபு முறையில் சீனாய் மலையில் மாமன்னனாகிய இறைவன் இஸ்ராயேல் மக்களுடன் உடன்படிக்கை செய்கிறார்.

தொடர்ந்து இறைவன் கொடுத்த நிபந்தனைகளைப் பார்ப்போம். இவை மாமன்னன் சிற்றரசனுக்குக் கொடுத்த நிபந்தனை போன்று அமைந்துள்ளது (1) சீனாய் மலை உடன்படிக்கை முக்கிய நிபந்தனை பத்துக் கட்டளைகள் (யாத், 20: 3–17) (2) மாமன்னனாகிய இறைவனுக்கு செலுத்தவேண்டிய திறை (யாத், 23: 16–19)ல் கூறப்பட்டுள்ளது அதாவது நிலத்தின் விளைச்சலின் புதுப்பலனை ஒப்புக்கொடுத்தல் (iii) மக்களிடையே ஏற்படும் பூசல்களை தீர்க்க இறைவனிடம் செல்லவேண்டும். (யாத் 18: 13). இது சிற்றரசர்களிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்க்க மாமன்னனிடம் செல்வதுபோல் இங்கு மக்களிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்க்க மோயீசன் கூடாரத்தில் இறைவனின் பிரதிநிதியாக நின்று விசாரிக்கின்றார்.

இப்படியாக எழுதப்பட்ட உடன்படிக்கைப் பத்திரம் பேழையில் வைக்கப்பட்டது (யாத் 25: 16). இந்த உடன்படிக்கை காலத்திற்குக் காலம் எடுத்து மக்கள் முன் வாசிக்கப்படும்.

உடன்படிக்கைக்கு சாட்சிகள் தேவை எனவே அன்று தேவர்களைச் சாட்சியாக அழைத்தனர். ஆனால் சீனாய் உடன்படிக்கையில் இறைவனே உடன்படிக்கை செய்வதால் சாட்சிகள் தேவையில்லை.

இப்படியாகச்செய்யப்பட்ட உடன்படிக்கை உறுதிப்படுத்த உறுதிமொழி மக்களால் கொடுக்கப்படுகிறது ''ஆண்டவர் சொன்னபடியெல்லாம் செய்வோம் (யாத் 24: 7). இவ்வாறு சீனாய் உடன்படிக்கை செய்யப்பட்டதாக யாத்திரையாகமத்தில் படிக்கிறோம்.

இ. ம. ஜெயசீலன்

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்.

இதுவரைபலவித பழமொழி முதுமொழி ஒப்பீடுகளைக் கூறி வந்தேன். அநேக தடவைகளிலே நமது இளமைத் துடிப்பினால் உணர்ச்சி வசப்படுதலினால் பின் வருவனவற்றை முன் யோசியாது செயலில் இறங்கிய பின் பின்னால் வருத்தப்படுகின்றோம் இல்லையா.

இதற்கு வேதாகம ஆசிரியர் 7 / 23 ல் ''தன் உயிர் சேதமாகப் போகிறது என்று அறியாத பறவை வலைக்குள் வேகமாக பறந்தோடுவதுபோல அவனும் போகிறான் ஈட்டி அவனுடைய ஈரலை குத்தி ஊடுருவும் மட்டும் காரியத்தை கண்டறிய மாட்டான்''

என்ன அருமையான வார்த்தை பார்த்தீர்களா?

இன்றைய காலகட்டத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற எமக்கு கூறுகின்ற இறை வார்த்தை இது.

இதற்கு எம்மூர் முதுமொழியாளர்கள் சளைத்தவர்களா என்ன? மூன்று முதுமொழிகள் மூலம் சுருக்கி உறைக்க உரைக்கிறார்கள்.

'ஆழமறியாமல் காலைவிடாதே'
''சேர் இடம் அறிந்து சேர்''
''இளம் கன்று பயமறியாது''

இருசாராரும் உரைப்பது எம்மவர்க்கேசிந்தித்துப் பாருங்கள்.

இன்னொன்றையும் கூறுகிறேன். இதுவும் இன்றைய தலைமுறைக்கு உதவும்.

ப. மொ. 7 / 26 ல் ''அவள் பலரைக் காயப்படுத்தி விழுத்தாட்டியுள்ளாள். மிகுந்த வல்லவர்களும்கூட அவளால் கொல்லப்பட்டார்கள்''

இப்படிக் கூறும் இறை வார்த்தைக்கு மேலும் மூன்று முதுமொழிகள்.

1. ''ருசி கண்ட பூனை உறி விட்டு உறிதாவும்''

2. ''நுனி நாக்கில் அமிர்தம். அடிநாக்கில் நஞ்சு''

3. ''உதட்டில் வெல்லம் உள்ளத்தில் பகை''

மதியீனனாக, இறைவன் கொடுத்த மனச்சாட்சியையும் மறந்து - சிற்றின்பத்துக்காக- தன் அறிவை அடகுவைக்கும் அறிவிலியைப் பார்த்து ப. மொ ஆசிரியர் 7 : 22 இல் சீறிச் சினக்கின்றார் எப்படி?

''பலிக்காகக் கூட்டிக் கொண்டு போகப்படும் எருது போலும், - மோக வெறியால் குதித்து நிற்கும் செம்மறிக்கிடாயைப்போதும் - மதியீனனை அவன் தான் சங்கிலியிட்டப்பட இழுத்துக்கொண்டு போகப்படுகின்றான், என்று அறியாமல் உடனே அவளைப் பின் தொடர்கின்றான்.''

இப்படித் தூற்றி அவனைச் சிந்திக்கத் தூண்டும் இறை வார்த்தைக்கு

நம்மூர் முதுமொழியாளர்—

''உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா...''

என்று சிந்திக்கத் தூண்டி, இன்னும்—

'யானை கொழுத்தால்-தானே மண்ணை அள்ளி தன் தலையில் போட்டுக்கொள்ளும்' என்றும் இன்றைய எமது இளைஞர்களுக்கு புத்தி கூறுகின்றார்.

இது எப்படி இருக்கு?

உங்கள் அபிப்பிராயங்களையும், எமக்கு எழுதுங்கள்.

—எஸ். ஏ. நாதர்.

# காவலன் கண்மணிகள்

| ஒளி: 2<br>சுடர்: 33 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

### மிகச்சிறந்த தேர்வுக்கான விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1) iii | 2) i | 3) iii | 4) iv | 5) iii |
| 6) ii | 7) i | 8) iii | 9) iv | 10) ii |
| 11) ii | 12) iii | 13) i | 14) iv | 15) ii |
| 16) iv | 17) i | 18) iii | 19) i | 20) ii |

### தட்டிப்புதிர்களுக்கான விடைகள்

புதிர் 1: 1) அமல அன்னை 2) மன்னர் 3) பாதகன் / கொலைஞன்
புதிர் 2: 1) தாவீதடிகள் 2) வீண்பாடு 3) கக்கல் / கண்ணோய்
புதிர் 3: 1) சின்னப்பர் 2) சாத்தான் 3) பரபாஸ்
புதிர் 4: 1) அருளப்பர் 2) பருவம் 3) பர்ணபா

### திருக்குறளைக் கற்போம்

இன்றைய மாணவ சமுதாயம், நாளைய ஆளும் சமுதாயம், வாழும் சமுதாயம் ஆகும் இன்று கற்றுணரத் தவறிவிட்டால் நாளை கட்டியாள முடியாது

மனித மனங்களைவழிப்படுத்தி, நெறிப்படுத்தும் சக்தி தமிழ் மறையாம் திருக்குறளுக்கு உண்டு என்று பெரியோர் சொல்கின்றனர். திருக்குறள் நெறியைக் கற்றுணர்ந்தவர் வாழ்வு மற்றவர்க்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது.

காவலனின் 'எம் கருத்தில்' வரும் திருக்குறளைக் கற்றுணர வேண்டுமாயின் திருக்குறளை நல்லிதயத்துடன் கற்க வேண்டும்.

பி. றி. நிரஞ்சன்
அங். எண்: 26.

### நாளொரு திருக்குறள் நாமும் கற்போம்

''யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு''

திருக்குறள்.

### இன்றைய வாழ்வில்

இன்றைய நாளை எண்ணிய நெஞ்சம்
ஏக்கம் கொண்டது
நிந்தனை பாடி நீசரை ஏசி
நிம்மதி இழந்தது
உதித்த சூரியன் உறங்கு முன்னே
உண்மைகள் உறங்குது
வசித்த வீடும் வாழ்வும் இழந்து
மானிடம் அழியுது
நாளைய வாழ்வு நலமுடன் இருக்க
நாம் என்ன செய்யலாம்?
நம் நாதன் காட்டிய பாதையை
நல் மனம் கொண்டு நோக்குவோம்

பா. பிறின்சி
அங். எண்: 55

### உள்ளத்திற்கு உரம்:

* சுயநலம் அற்ற செயல்களே அறச் செயல்கள்
* ஆசை பிடித்தவருக்கு அமைதியில்லை
* ஆற்றல் அதிகரிக்க அமைதியும் அதிகரிக்கும்

### புனிதர்களின் பொன் மொழிகள்

நான் போய்ச் சேருவதற்கு மோட்சம் இல்லாதிருந்தாலும் உமது அன்பிற்கு மாறாக பாவம் செய்யத் தூண்டுகிறவர்களைத் தண்டிக்க நரகம் இல்லாதிருந்தாலும் என் தேவனே! நான் உன்னை அன்புசெய்கிறேன்

— புனித பிரான்சிஸ் சவேரியார்

உன் கைகள் வேலை செய்யட்டும் அதில் உன் இருதயம் ஈடுபட்டிருக்கட்டும்

— பரிசுத்த ரீத்தம்மாள்

நான் செய்கிற காரியம் எவ்வளவு பெரிதென்று கடவுள் நினைப்பதில்லை. ஆனால் அதை எவ்வளவு அன்புடன் செய்கின்றோம் என்றுதான் கவனிக்கின்றார்.

— புனித அவிலா தெரேசம்மாள்

கடவுள் திருமுன் ஒருவன் எப்படி இருப்பானோ அப்படித்தான் அவன் வெளியிலும் இருப்பான். இதைவிட ஒருவன் வேறு விதமாக இருக்கமுடியாது.

— புனித பிரான்சிஸ் அசிசி

தொகுப்பு: ம. நிர்மல ராஜ்
அங். எண்: 66



# வாசகர் கருத்து



21/10/1988 பாதுகாவலனில் இடம்பெற்ற சுவாமி ஜீவாபோல் (அ.ம.தி) அவர்களுடைய "நினைவுகள் வளர வேண்டும்" என்ற கட்டுரை சிலுவழிபாடு என எம்மதத்தை பரிகாசம் செய்யும் பலருக்கு இது விளக்கமாகவும், புனிதர்களின் மகிமையும், அதேநேரத்தில் இறைவனையும் புனிதரையும் சமமாக நினைத்து வழிபடும் சிலருக்கு, இறைவழிபாட்டையும், புனிதர் வணக்கத்தையும், பிரித்து எடுத்துக்காட்டி புனிதர் பாதையில் புனிதர் வழியில் இறைவனை அடைய நல்விளக்கத்தை அளித்துள்ளது. சிலரின் வீண் சந்தேக கேள்விகளால் பலர் விசுவாசமும் நம்பிக்கையும் அற்று இக்காலகட்டத்தில் இப்படியான விளக்கங்களை அளிப்பதன்மூலம் உறுதியற்று தளர்ந்த மனத்துடன் இருப்பவருக்கு நல் விளக்கம் மூலம் விசுவாசத்தை கொடுத்து இறைவழியில் வழி நடத்த முடியும்.

யோ. யோன்சன் ராஜ்குமார்
நாரந்தனை வடக்கு

★ ✶ ★

இன்றைய காலகட்டத்தில் அநேகரின் இதயங்களைக் கொள்ளை கொண்ட ஒரே கத்தோலிக்கப் பத்திரிகை பாதுகாவலன் என்று சொன்னால் அது மிகையாகாது.

காலத்தின் தேவைகளை உணர்ந்த ஆசிரியர் வாரா வாரம்வாசகர்களை பக்குவமாக ஞானப்பாதையில் வழிநடத்திச் செல்லும் பாணி பாராட்டுக்குரியது. அவர் பணி சிறக்க வாழ்த்துக்கள்.

நல்ல சமூகத்தின் அத்திபாரம் நல்ல குடும்பம், 'குடும்பம் ஒரு கதம்பம்' என்ற பகுதியின் மூலம், அருட் தந்தை ரூபன் நல்லகுடும்பங்களை மட்டுமல்ல, 'காவலனுக்கு' புதிய எழுத்தாளர்களையும் உருவாக்கி வருகிறார் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

தேனருவி — சிந்தைக்கு விருந்து, "விடை இல்லாத வினக்கள்" என்ற சிறுகதை நெஞ்சை உருக்குவதாய் உள்ளது. எழுதியவருக்குப் பாராட்டுக்கள். இன்றியமையாத பகுதி இளைஞர் உலகம்.

மொத்தத்தில் சிறந்த எழுத்தாளர்களின் சிந்தனையைத் தாங்கிவரும்—

பாதுகாவலன்
ஒரு தெவிட்டாத தேன்.

செல்வி. லூசியாசூசைப்பிள்ளை,
யாழ்ப்பாணம்.

## எழுதிச் செபியுங்கள் போட்டி—19

சுதந்திரமான நேர்மையான தேர்தல்கள் இடம் பெற" "ஒரு செபம் எழுதி 2-12-88க்கு முன் பாதுகாவலன். தபாற் பெட்டி இல 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள், சிறந்த செபத்துக்குப் பரிசு ரூபா 25/- பரிசு பெறுபவர் பெயரும், அடுத்து போட்டியும் 8-1-89 அன்று பாதுகாவலனில் வெளிவரும்.

### எழுதிச் செபியுங்கள் போட்டி—18
### பரிசு பெறும் செபம்

**ஒற்றுமையே பலம் என்பதை உணர்ந்துவாழ செபம்**

அன்பின் தந்தையே சமாதானத்தின் தேவனே, இந்த நாட்டிலே வாழும் தமிழ் பேசும் சமுதாயத்திற்கு ஒற்றுமையின்மையினால் சென்ற காலங்களில் ஏற்பட்டுவந்த உயிரிழப்பு, பொருளிழப்புக்களையும் அவர்கள் அனுபவித்த தாங்கொண்ணாத வேதனைகளையும் சோதனைகளையும் தயவாய் நினைவு கூர்ந்தருளும்.

சமுதாயச் சீர்திருத்தம்,உரிமைப் போராட்டம்,சுதந்திரம், நாட்டின் விடுதலை என்று வீரம் பேசிப் புறப்பட்ட இளைஞர் இயக்கங்களும், அரசியல் கட்சிகளும் தங்களுக்குள்ளே பகைமை கொண்டு ஒருவருக்கொருவர் மோதி உயிரிழந்து அழிந்து போவதை எண்ணி ஆறாத்துயர் கொண்டு அழுது அங்கலாய்த்து நிற்கின்ற தமிழ்ச்சமுதாயத்தை கருணை விழிகொண்டு நோக்கியருளும், என் சமாதானத்தையே உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்,என்று திருவுளம் பற்றின யேசுவே, எங்கள் மத்தியிலும் சமாதானம் ஏற்பட்டு, ஒற்றுமையே பலம் அதுவே நமக்கு விடுதலை தரக்கூடிய பெரிய ஆயுதம் என்பதனை எங்கள் இளைஞர் இயக்கங்களும் அரசியல் கட்சிகளும் உணர்ந்து செயல்பட அவர்கள் மனங்களை உமது அருள்கொடையால் நிரப்பியருளும்.

அப்போது நல்லதொரு பலம் பொருந்திய தமிழ்ச் சமுதாயம் எங்களுக்கு உமது அருளினால் ஏற்பட்டு விடுதலை பெற வழி பிறக்கும். ஆமென்.

பி. வசந்தா குரூஸ்
மறிச்சுக்கட்டி, முருங்கன்.

**பாராட்டுப் பெறுபவர்கள்:**

1. வினிஷியா சுறேந்தினி ஆரோக்கியநாதன் தி.கு.க. யாழ்.
2. பர்னந்து நொய்லின் 2ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி.
3. செ. மேரி பிளவ்ரு, தும்பளை, பருத்தித்துறை.
4. டொறிஸ் இராகினி. இ. தும்பளை, பருத்தித்துறை.
5. ப. செல்வி ஏ. வீ. றோட், கொழும்புத்துறை.
6. றமீன் நவிஷா, 28/2, ஏ. வீ. றோட், கொழும்புத்துறை.
7. செ. மேரி அன்ரனிற்ரு மணற்குளம், உயிலங்குளம்.
8. யோ. றிச்சாட் டொமினிக், லெனின் பெயிட் 1ஆம் வட்டாரம், புங்குடுதீவு.
9. த. எவாஞ்சலின் தயாளினி நம்.3. 3ஆம் கு.தெரு, யாழ்.
10. யேசுராசா றெஜினோல்ட் குளமன்கால், மல்லாகம்.
11. ஞானப்பிரகாசம் மொனிக்கா, அல்லைப்பிட்டி
12. சோதிநாதன் கோகிலவதனி, உரும்பிராய்.
13. ஆர். யோசப் ஜெயகாந்தன், மாந்தை

பரிசுபெறும் நற்பேருளர்: பி. வசந்தா குரூஸ் முள்ளிக்குளம், மறிச்சுக்கட்டி, முருங்கன்.

## பாதுகாவலன் நிதி

| | | | |
|---|---|---|---|
| 160 | V. திருச்சிலுவை கோவில்பிள்ளை | கொழும்பு | 25-00 |
| 161. | செல்வி. அ. கலிஸ்ரா | இளவாலை | 15-00 |
| 162. | T. M, பாக்கியநாதர் | மண்டைதீவு | 25-00 |
| 163. | செ. பத்திமாசீலன் | மண்டைதீவு | 25-00 |
| 164. | பே. கிறகோரி | மண்டைதீவு | 25-00 |
| 165, | ஓர் அன்பர் | ,, | 20-00 |
| 166. | செ, அந்தோனி பறுநாந்து | ,, | 50-00 |
| 167. | ம. பறுநாந்து | ,, | 25-00 |
| 168. | ச. அ. ஸ்ரனிஸ்லாஸ் | ,, | 25 00 |
| 169. | கிறகோரி சகாயநாதன் | ,, | 25-00 |
| 170. | செ ஞானமுத்து | ,, | 30-00 |
| 171. | பாதுகாவலன் வாசக நேயர் | ,, | 25-00 |
| 172. | ம. சூசைப்பிள்ளை | ,, | 30-00 |
| 173. | R. தேவசகாயம் | ,, | 110-00 |
| 174. | T. A. பெர்னண்டோ | ,, | 25-00 |
| 175. | ஓர் அன்பர் | | 150-00 |

## 1ஆம் வருட மரண ஞாபகார்த்தம்



வண.ஜி.ரி. பாலசுந்தரம் அ.ம,தி.
மலர்வு 29–05–1907
திருமுழுக்கு: 12–02–1928
குருத்துவம்: 10–08–1935
உதிர்வு: 14–11–1987

உம் வாழ்வில் உம்மை நேசித்தோம்
உம் மறைவிலும் உம்மை மறந்தோமில்லை
இறைவனின் இணைப்பில் சாந்தியடைந்திடுவீர்

செபத்தில் அன்போடு நினைவுகூரும் அன்பர்கள்.

## புனிதர் வழியில்

நவம் - 11
புனித மாட்டின். (316 - 399)

ஆரம்ப காலத்தில் ராணுவ வீரராக இருந்தவர். பின்னர் கிறிஸ்தவனுகி குருமடத்தில் சேர்ந்தார். தனது தாயைக் கிறிஸ்தவளாக்கும் பேறுபெற்ருர். ஏழைகள் மீது மிகுந்த சரிசனையுடைய இவர் ஆயரானபோதும் தமது தவ வாழ்வைக் கைவிட்டவரல்லர்.

நவ. 12
புனித ஜோசபாத். (1580 - 1623)

இவர் 24 வயதில் சந்நியாசியானார். குருக்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பெரிதும் பாடுபட்ட இவர் மடாதிபதியாகி பின்னர் 38 ம் வயதில் பேராயர் ஆனார். "ஆன்மாக்களைத் திருடுகிறவர் என்று அழைக்கப்பட்ட இவர் பெரிய மனிதர் பலரை மனந்திருப்பினர். கிழக்கிந்திய சபையினரை ரோமையுடன் சேர்க்க இவர் செய்த முயற்சிகள் அபார வெற்றியளிப்பதைக் கண்ட எதிரிகள் இவரைக் கொன்றனர்.

நவ 15
புனித பெரிய அல்பேட். (1206 - 1280)

இவர் இளம் வயதிலிருந்தே தேவதாயில் விஷேஷ பக்தி கொண்டிருந்தார். ஆயராகப் பணிபுரிந்த இவரைப் பாப்பு மார்களும், அரசர்களும் கலந்தாலோசிக்க வருவார்கள். அக்காலத்தில் பரவியிருந்த தவருன கொள்கைகளை எதிர்த்துப் போராடி திருச்சபைக்கு மிகுந்த நன்மை செய்தவர்.

புனித ஜெர்த்துருத் (1256 1302)

இவள் ஆண்டவருடைய பாடுகள் மீதும், திவ்யநற்கருணை மீதும் தேவதாய் மீதும் மிகுந்த பக்தி, கொண்டவள் கடமைகளைச் சிறந்த விதமாய்ச் செய்வதோடு தனக்குக் கீழே இருந்த கன்னியரின் தேவைகளை நுணுநுணுக்கமாய்க் கவனித்து அவைகளைப் பூர்த்தி செய்வாள். திரு இருதயப் பக்தியைப் பரப்பிய முதல் அப்போஸ்தலர்களுள் இவளும் ஒருத்தி.

நவ. 16
புனித மார்கரீத் (1045-1093)

அரச குலத்தில் பிறந்த இவள் மணவாழ்வில் ஈடுபட்டு தனது பிள்ளைகள் எண்மரையும் மக்களின் ஆன்ம நலனுக்காக உழைக்கப் பயிற்றுவித்தாள். கோவில்களையும், சந்நியாச மடங்களையும் கட்டினாள். இவளும், இவளுடைய கணவரும் தினந்தோறும் 300 ஏழைகளுக்கு அரண்மனையில் உணவு வழங்கி வந்தார்கள். கணவன் போரில் இறந்தபோது இச்சிலுவையைக் கடவுளின் கரங்களிலிருந்து நன்றியுடன் ஏற்றுக் கொண்டார்.

நவ. 17
புனித ஹங்கேரி எலிசபேத். 1207 - 1231

இவளும் மணவாழ்வில் ஈடுபட்ட அரசியாக இருந்தபோதிலும் ஏழைகளிலும், நோயாளிகளிலும் கிறிஸ்துநாதரையே கண்டு அவர்களுக்கு சேவை செய்து வந்தாள். தொழுநோயாளிகளுக்குத் தானே சிகிச்சை அளித்த இவள் ஏழைகளுக்கு உதவி செய்யத்தன் அரச ஆடைகளையும், ஆபரணங்களையும் விற்ருள்.

செல்வி. லூசியா சூசைப்பிள்ளை.
யாழ்ப்பாணம்.

## 31ஆம் நாள் நினைவு தினம்



அருட்சகோதரி மேரி டெனிஸ்
தோற்றம் 05–04–1929 மறைவு 17–10–1988

இவரின் ஆன்ம சாந்திக்காக 17–11–1988 இல் புனித லோறன்ஸ் ஆலயத்திலும் தி. கு. க. மாகாண இல்ல ஆலயத்திலும் நடைபெறும் பூசைப்பலியில் கலந்துகொள்ளுமாறு அருட்சகோதரிகள், உறவினர், நண்பர்களை அழைக்கிறோம்.

அக்கா, பிள்ளைகள்,
மருமக்கள். பேரன்
றெஜீனு லொட்ஜ்,
தலைமன்னர். A/157

## சேவைநலம் பாராட்டுவிழா

கடந்த ஐந்தாண்டு காலமாக மயிலிட்டி றோ. க பாடசாலையில் அதிபராகப் பணியாற்றி தற்போது அதிபர் பதவியில் இருந்து இளைப்பாறுகின்ற அருட் செல்வி. லீயோ அவர்களுக்கு, சேவைநலம் பாராட்டு விழா கடந்த 16-10-88 அன்று பாடசாலை ஆசிரிய மாணவர்களாலும், மயிலைப்பங்கு மக்களாலும் நடாத்தப்பட்டது. காலை 6.30 மணிக்கு அதிகளாரால் நிறைவேற்றப் பட்டது.

மயிலைப் பெற்றோர்களாலும் பங்கு மக்களாலும் நன்றியின் அடையாளமாக அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. அதைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன

## "எம் கருத்துக்" குறள்தெளிவுரை

சான்றோரின் நலம் என்று கூறப்படுவது அவருடைய பண்புகளின் நலமே; மற்ற நலம் வேறு எந்த நலத்திலும் சேர்ந்துள்ளதும் அன்று.

பாதுகாவலன்
PATHUKAVALAN

## பேராசிரியரின் மரணம் குறித்து விசாரணை நடத்தக் கோரிக்கை

1973-ல் மரணமான செயோல்பல்கலைக்கழகசட்டத் துறைப் பேராசிரியர் சோயி சொங் கில் என்பவரின் மரணத்தைக் குறித்து விசாரணை நடத்துமாறு நீதிகோரும் கத்தோலிக்க குருக்கள் தென் கொரிய அரசாங்கத்தைக் கேட்டுள்ளனர்.

கொம்யூனிஸ்ற் ஆதரவாளர் எனக் கருதப்பட்ட சோயி தென்கொரிய இரகசியப் பொலிசாரால் விசாரணை செய்யப்பட்ட வேளையில் ஏழாம் மாடியிலிருந்து பாய்ந்து மரணமானதாகக் கூறப்படுகிறது.

ஆனால் அந்நாட்களில் இரகசியப்பொலிஸ் தலைவராக இருந்த லிஹூராக் மீது வழக்குத் தாக்கல் செய்வதாக இருந்தால் 1980-ம் ஆண்டுக்கு முன்னர் செய்திருக்க வேண்டுமென தற்போதைய அரசாங்கம் கூறியுள்ளது.

சோயி மேற்குஜேர்மனியில் சட்டக் கல்வி பயின்றுகொண்டிருக்கையில் வட கொரியப் பிரதிநிதிகளைச் சந்தித்தமையால் அரசாங்கமே அவரது மரணத்துக்குக் காணமாயிருக்கலாமெனத் தாம் சந்தேகப்படுவதாக அவரது ஆதரவாளர் கூறியுள்ளனர்.

நீதி கோரும் குருக்கள் 300-400 கத்தோலிக்க குருக்கள் உள்ளனர். இவர்களுள் பெரும்பாலானோர் செயோல் நகரத்தைச் சேர்ந்தவர்கள். பேராசிரியர் சோயி பற்றி மட்டுமல்லாது இதுபோன்ற ஏனைய பொலிஸ் வன்முறைகளையும் எடுத்துக் காட்டியுள்ளது.

## மணிலாவில் பங்குப்பணியில் தமிழ்க் கன்னியரின் அனுபவம்

நல்லாயன் சபைக் கன்னியரான அருட்செல்வி வெரோணிக்கா சாமிநாதன் பிலிப்பைனில் தாம் செய்து வரும் பங்குப் பணி பற்றிக் குறிப்பிடும்போது பெண் துறவியர் இப்பணியில் செய்யக் கூடியது அதிகமுண்டு எனக் கூறினார்.

மணிலாவில் பயிற்சி பெற்ற 43 வயதான அருட்செல்வி வெரோணிக்கா மேற்கு மலேசியாவிலுள்ள புனித அருளானந்தர் பங்கில் மூன்று வருடகாலமாகப் பணியாற்றி வருகிறார். பங்குக் குருவான பிதா லூசியன் கற்றேல் மேற்கல்விக்காக மணிலாவுக்கும் பின்னர் வைத்திய சிகிச்சைக்காக பிரான்சுக்கும் சென்றிருந்த போது பங்கு வேலைகளை இவரே கவனித்து வந்தார்.

இங்கு வாழ்வோர் பெரும்பாலும் சீன வம்சாவழியினர். குடிசைகள், அரசாங்க மாடிகள், தனியார் மாடிகள், நடுத்தர வீடுகள் போன்றன அடங்கிய பெரும் பரப்பைக் கொண்டது இப்பங்கு.

திருவருட் சாதனங்களை நிறைவேற்றுவதைத் தவிர மற்றெல்லாப் பங்குவேலைகளும் இவராலேயே செய்யப்பட்டன. பங்குக் குழுக்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வந்தன. குடும்பப் பிரச்சினைகள், இளைஞர் பிரச்சினைகள், போதைப் பொருள் பாவனை, குடும்பக் கட்டுப்பாடு, பொருளாதார ஒழுக்கப் பிரச்சினைகள் ஆகியவற்றில் அவர் செயலாற்றிவருகிறார். அத்துடன் வளர்ந்தோர் மறையறிவு, கத்தோலிக்கர் உருவாக்கம், சிறுவர் மறைக் கல்வி போன்றவைகளும் அவர் பணியாற்றிவரும் வேறு துறைகளாகும்.

பங்கு மூப்பரில் பெரும்பாலானோர் தமிழர்கள். எனவே திருவழிபாட்டிலும் ஏனைய விடயங்களிலும் தமிழே பயன்படுத்தப்படுகிறது.

பங்கு நிர்வாகத்தில் அதிக நேரம் செலவிடப்படுவதால் துறவறக் குழுவாழ்வுக்கு அதிக நேரம் கிடைப்பதில்லை என அருட்செல்வி வெரோணிக்கா கூறுகின்றார். இதற்குப் பரிகாரமாக இருவர் அல்லது மூவர் அடங்கிய ஒரு துறவறக் குழு பங்கு மக்கள் மத்தியில் வாழ்ந்து சான்று பகர்வதுடன் பங்குக்குரு தலைமையில் அவர்கள் அடிக்கடி ஒன்றுகூடி செபித்து, சிந்தித்து, மக்களின் நலனுக்காகத் திட்டமிடுவது சிறந்ததெனக் கருதுகிறார்.

## இளைஞர் பாசறை

செட்டிகுளம், மடுறோட் பங்கு இளைஞர் யுவதிகளுக்கான மூன்று நாள் பாசறை ஐப்பசி மாதம் 21, 22, 23ம் திகதிகளில் பங்குத் தந்தையர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டது. இக்கருத்தரங்கினைச் சிறப்பிக்க பல குருக்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்கள். பல பிரச்சினைகளும் இன்னல்களும் தலைவிரித்தாடும் இக்கட்டான காலத்தில் திடுக்கிடும் திகிலுற வைக்கும் சம்பவங்கள் நிகழும் நேரத்தில் ஏறக்குறைய நூறு (100) இளைஞர்களுடன் இப்பாசறை அமைதியான முறையில் இனிதே நடந்தேறியது.

வழிபாட்டுடன் ஆரம்பமான இக்கருத்தரங்கு, சிறப்பான பல கருத்துக்களை எம் இளைஞர் முன்வைத்தது என்றால் மிகையாகாது.

சமுதாய வளர்ச்சிக்கு இளைஞர் யுவதிகளின் பங்களிப்பு, வாழ்க்கைக்கு விவிலியம் எவ்வாறு துணை செய்கின்றது, துறவறம், திருமண வாழ்க்கையின் பல்வேறு விடயங்கள், பெற்றோர் இளைஞர் இவர்களுக்கிடையிலான முரண்பாடுகள், உறவு, அழைத்தல் என்பவற்றின் சிறப்பான கருத்துக்கள் வழங்கப்பட்டதுடன் பல்வேறு சிக்கல் நிறைந்த வினாக்களுக்கும் தகுந்த முறையில் விளக்கங்கள் வழங்கப்பட்டன.

இக்கருத்தினைப் பொருளாக வைத்து இறுதி நாளான 23ம் திகதி மாலையில் பல கலை நிகழ்ச்சிகளும் இளைஞர் யுவதிகளால் நடாத்தப்பட்டது. இவை அனைத்தும் இன்றைய இளைஞர்களின் சமுதாயப் பங்களிப்பும் சமய மேம்பாடுகளும், கிறிஸ்துவின் மன்னிப்பு என்பதைமையப் பொருளைக் கொண்டு அமைந்திருந்தன.

இறுதியாகப் பல இன்னல்கள் மத்தியில் இங்கு வந்து விரிவுரையாற்றிய அருட் தந்தையர்களுக்கும் ஆசிரியருக்கும் தொடர்ந்து இக்கருத்தரங்கினை ஒழுங்கு செய்த செட்டிகுளம், மடுறோட் பங்குத் தந்தையர்கள் இருவருக்கும் இளைஞர் யுவதிகள் அனைவரின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்ததுடன் கருத்தரங்கு இனிதே நிறைவேறியது.

தகவல் அ. மேரி.

## பாடசாலை மாணவ மாணவியருக்கு கருத்தரங்கு

உயிலங்குளம் பங்கைச் சார்ந்த நான்கு கத்தோலிக்கப் பாடசாலை மாணவ மாணவியர்களுக்கான கருத்தரங்கு உயிலங்குளம் பாடசாலை மண்டபத்தில் 29.10.88 அன்று காலை எமது பங்குத்தந்தை அருள்திரு. ஸ்ரனி அன்ரனி (அ. ம. தி) அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

முதலில் தூய ஆவியானவருக்கு மாணவர்கள் தம்மை அர்ப்பணித்துப் பாடலைப்பாடியதோடு செபத்துடன் கருத்தரங்கு ஆரம்பமானது. கருத்தரங்கைச் சிறப்பிக்க வந்தவர்களை எமது பங்குத்தந்தை அறிமுகம் செய்து வைத்தார். அதனைத் தொடர்ந்து 'ஆசிரியை' றெஜினா ராமலிங்கம் அவர்கள் ''கல்வியும் அதன் முக்கியத்துவம்'' என்ற தலைப்பில் மிக நீண்ட நேரம்நடைமுறை உதாரணங்களோடு அரிய பல கருத்துக்களை வழங்கியதோடு மாணவர்கள் கேட்ட கேள்விகளுக்கும், மிகத் தெளிவாகப் பதில் கூறினார்.

அடுத்து தாழ்வுபாடு பங்குத் தந்தை அருள்திரு. எமிலியானுஸ் பிள்ளை அவர்கள் "மதிப்பீடுகள்" என்ற தலைப்பில் தமது கருத்துக்களை நகைச்சுவையாக மாணவர்களோடு பகிர்ந்து கொண்டதுடன் மாணவர்கள் தங்களிடை கருத்துப்பரிமாறலை (விவாதம்) ஏற்படுத்தவும் வழி சமைத்தார்.

அதனைத் தொடர்ந்து எமது பங்குத்தந்தை அவர்கள் ''சமயம், ஒழுக்கம்'' என இரு பகுதிகளையும் விரிவுபடுத்திக் கூறியதோடு நன்றி உரையும் நிகழ்த்தினர். ஈற்றில் செபத்தோடு கருத்தரங்கு நண்பகல் 12.30 மணியளவில் இனிதே முடிவுற்றது.

இக் கருத்தரங்கில் பங்கு பற்ற உயிர்த்தராசன்குளம், பறப்பாங்கண்டல், உயிலங்குளம், இலகடிப்பிட்டி ஆகிய நான்கு பாடசாலைகளிலுமிருந்து பெருந்தொகையான மாணவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தது குறிப்பிடத்தக்கது.

தகவல்:- சந்தியோகு பிரபா
முதலை நத்தி.

## மாணவர் ஒன்றியம் குறித்து பேராயர்

இந்தோனேஷிய பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் திருச்சபையின் மட்டிலும் நாட்டின் மட்டிலும் பொறுப்புள்ளதாயிருக்கின்றது என ஜகார்த்தாப் பேராயர் லியோ சொகோட்டோ குறிப்பிட்டார்.

அரசாங்கத்தையோ, திருச்சபையையோ, பிறரையோ தாக்குவதை விடுத்து உள்சீர் திருத்தங்களைக் கவனிக்குமாறு கூறிய அவர் "அமைப்புக்களில் சேரமக்கள் விரும்பாதபோதிலும் சமுதாயத்தில் மாற்றங்களைக் கொண்டுவரவும் அறத்தை நிலை நாட்டவும் அமைப்புக்கள் அவசியம்'' என்றார்.

ஒன்றியத்தின் முன்னாள் தலைவரான அந்தோணியஸ் மோலியோனோ தாம் 1950 களில் கடைப்பிடித்து வந்தது போன்ற ஆன்மீகப் பயிற்சிகளை மீண்டும் கொண்டுவரவேண்டும் என கருத்துத் தெரிவித்தார். மாதத்திற்கிருமுறை மேற்கொள்ளப்பட்ட இப்பயிற்சிகள் அங்கத்தவர் கட்டுப்பாடுள்ள ஒரு வாழ்க்கையை மேற்கொண்டு, எதிர்காலத் தலைவர்களாக, பல்வேறு தொழில் புரிபவர்நடுவில் உப்புப் போன்று விளங்க வேண்டுமென்று குறிப்பிட்டார்.

### திருவருகைக் காலம்

நவம்பர் 27ஆம் திகதி திருவருகைக் காலம் ஆரம்பமாகின்றது. புதிய திருவழிபாட்டு ஆண்டு தொடங்குகின்றது. திருவருகைக் காலத்தில் ஆடம்பரமான திருமணங்கள், கொண்டாட்டங்கள் விலக்கப்பட வேண்டும்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1988-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கார்த்திகை தரும் செய்தி

கத்தோலிக்க திருச்சபையானது பல்வேறு விழாக்களைக் கொண்டாடி மகிழ்கின்றபோதிலும், கார்த்திகை மாதமாகிய இம்மாதத்தை விசேடமாக இறந்த ஆத்துமாக்களுக்காக ஒதுக்கியுள்ளது. இதன் மூலம் எமக்கு புதிய செய்தி ஒன்றும் கிடைக்கின்றது.

ஆம், இம்மாதம் இறந்த ஆத்துமாக்களை நினைவு கூருவதற்காக மட்டுமன்றி இறக்கப் போகின்ற எம்மையும் எமது மரணத்தைப்பற்றிச் சிந்திக்கவுமே இக்காலத்தை விசேடமாக ஒதுக்கியுள்ளது என்பதனை நாம் அனைவரும் நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

பத்து மாதங்களில் பிறக்கும் மனிதன், தான் இறக்கின்ற காலத்தையும் முன்பே அறிந்தால், தன்னை நினைக்கவே மாட்டான் என்றுதானே இறைவன் அந்த உண்மையை எமக்கு மறைத்துவிட்டான். ஆகவே என்றோ ஒருநாள் நாம் மரணத்தைச் சந்திக்கப் போகின்றோம்.

''நான் சாகப்போகின்றேனா'' என்றதும், எம்மில் பலருக்கு எம்மையறியாது ஒருவித பயவுணர்வு ஏற்படுகின்றது. ஏன் இந்த மரணம், இது எப்போது ஏற்படும் என்ற கேள்விகள் கூட உள்ளத்தில் எழுகின்றன.

பிறப்பு என்றொரு தொடக்கம் இருந்தால் இறப்பு என்றொரு முடிவு நிச்சயம் இருக்கும். ஆனால் கத்தோலிக்கர்களாகிய எமது வாழ்வு இந்த உலகோடு முடிந்துவிடுவதில்லை. அது மறு உலக வாழ்வாகத் தொடருகின்றது. இதனை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இதனால்தான் இறைமகன் கிறிஸ்து ''உயிர்ப்பும் உயிரும் நானே — என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்'' என்று அழகாகக் கூறியுள்ளார். இதை நாம் உண்மையில் விசுவசித்தால் எம் மரணத்தைப்பற்றி பயமோ கவலையோ கொள்ளத் தேவையில்லை.

இதைத்தான் இறைமகன் கிறிஸ்து பத்துக்கன்னியர் உவமை மூலம் மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார், எண்ணெய் இல்லாத விளக்கை வைத்திருந்த அறிவிலிகள்போல் இல்லாது எண்ணெய் உள்ள விளக்கோடு மணமகனின் வருகைக்காகக் காத்திருந்த விவேகிகளைப்போல் நாமும் எமது மரணத்தை, மனுமகனின் வருகையை ஆவலோடு காத்திருப்போம். இதனால் நாம் முடிவில்லா வாழ்வைப் பெறுவோம்.

சாவுக்குப் பின்வரும் வாழ்வு முடிவற்ற வாழ்வு.

செல்வி பற்றிமா றேஸ்
அந்தோனிப்பிள்ளை
முல்லைத்தீவு.

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்